பொன்னி

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
4 JUL 951
MADRAS

4 அணா

பொன்னி

மலர் 5 | ஜூன் 10, 1951 | இதழ் 7

திருவள்ளுவர் ஆண்டு 1982 வைகாசித் திங்கள் 27ம் நாள்

பொருளடக்கம்

நல்லதொரு சமுதாயம்	.... நாரண துரைக்கண்ணன்	1
சென்னை அரசினர் பொறுப்பு	.... தலையங்கம்	3
புது நாட்டியம்	.... கார்ட்டூன்	6
காலமும் கருத்தும்	.... [illegible]	7
பொழுதுபோக்கு	.... இனியன்	9
பேசும் பதுமை	.... நாரா நாச்சியப்பன்	11
இசையும் இரைச்சலும்	.... நா. பாண்டுரங்கன்	14
விடுதலை	.... புதுமைச்சித்தன்	23
பெண்கள் முன்னேற்றம்	.... மங்கை	42
பலி	.... பண்டரிநாதன்	45
நல்ல நண்பன்	.... ஜே. இன்பராஜ்	58
வளரும் இலக்கியம்	.... அ[illegible]	6[illegible]

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
JUL 1951
MADRAS

நல்லதொரு சமுதாயம்

எங்கு அறியாமை இல்லையோ, எங்கு ஏழ்மை இல்லையோ, எங்கு ஆண் பெண் வேற்றுமை இல்லையோ, எங்கு வேலையில்லாத் திண்டாட்டம் இல்லையோ, எங்கு பட்டினியும், பஞ்சமும் இல்லையோ, எங்கு வைதீகமும் முதலாளித்துவமும் இல்லையோ, எங்கு சுயநலமும் சுரண்டலும் இல்லையோ, எங்கு ஆதிக்க வெறியில்லையோ அங்குதான் சமுதாயத்திலுள்ள புன்மைகளும், புரட்டுகளும், பீடைகளும் இல்லாமல் ஒழியும். அங்கேதான் நிச்சயமாக நல்லதொரு சமுதாயம் ஏற்பட முடியும். அத்தகையதொரு சமுதாயம் ஏற்பட நாம் வழிவகை காணவேண்டும். நம் சமுதாய முற்போக்குக்கு முட்டுக்கட்டைகளாக இருக்கும் வைதீகத்தையும், முதலாளித்துவத்தையும் தகர்த்தெறிய நாம் முதலில் முயலவேண்டும். இப்பெருங் காரியத்தைச் செய்வதில், எல்லாக் கட்சியினரும் எல்லாப் பிரிவினரும் கருத்து வேற்றுமையை மறந்து ஒன்று சேரவேண்டும். முற்போக்குச் சக்திகளெல்லாம் ஒன்று திரளவேண்டும்.

[திண்டிவனத்தில் நடைபெற்ற சமூக சீர்திருத்த மாநாட்டில், தோழர் நாரண துரைக்கண்ணன் தம் தலைமையுரையில் இவ்வாறு குறிப்பிட்டார்]

பொன்னி வெளியீடுகள்

தோழர் இளமைப்பித்தன் சிறுகதைகளில் தமிழ் மக்களுக்கு ஆர்வம் உண்டு. அவருடைய மூன்ருவது சிறுகதைத் தொகுதி :

நினைவுச் சின்னம் ரூ. 1—0—0

உணர்ச்சிச் சித்திரங்களைத் தீட்டுவதிலே நண்பர் எஸ். ஆறுமுகம் இணையற்றவர். அவருடைய முதல் கதைத் தொகுதி :

கடல் முத்து ரூ. 1—0—0

தோழர் டி. கே. சீனிவாசனின் ஒவ்வொரு கதையும் ஒரு சிந்தனைச் சித்திரம் ! வாழ்க்கை விசித்திரங்களைப் பல கோணங்களில் எடுத்துக்காட்டும் அவர்தம் கதைக் கோவை :

உலக அரங்கில் ரூ. 1—0—0

தபாலாபீஸ் — பொதுமக்களுக்கு மிகத் தொடர்புள்ள இடம்; அங்கேதான் என்னென்ன வேடிக்கைகள் நிகழுகின்றன! அப்படிச் சில விநோதங்களைச் சுட்டிக் காட்டுவதுதான் நண்பர் க. சண்முகசுந்தரம் எழுதிய

தபாலாபீஸ் விநோதங்கள் ரூ. 0—8—0

தபாற்செலவு தனி. விற்பனையாளர்க்குத் தக்க கழிவு உண்டு

பொன்னி லிமிடெட்

16. சேணியம்மன் கோயில் தெரு

தண்டையார்ப்பேட்டை :: சென்னை-21

சென்னை அரசினர் பொறுப்பு

சென்னை வகுப்புவாரி உத்தரவு, இந்திய சுப்ரீம் கோர்ட்டில் செல்லத்தக்கதல்ல என்று தீர்ப்புப் பெற்றது. அத்தீர்ப்புக்குப் பிறகு, சென்னை அமைச்சர்கள் அரசியல் சட்டத்தைத் திருத்த வேண்டுமென்று டில்லி சர்க்காரிடம் தூதுசென்றனர். நிலைமையை விளக்கினர். வகுப்புவாரி உத்தரவு எத்துணை அவசியமென்பதைப் பண்டித நேரு புரிந்து கொள்ளுமளவுக்கு அறிவுறுத்தினர். நேரு, தம் அரசியல் திருத்த மசோதாவில், சென்னை அமைச்சர்களின் கோரிக்கையையும் கருத்தில் கொண்டு திருத்தங்களுக்கு ஏற்பாடு செய்தார். மசோதா டில்லி பார்லிமெண்டில் நிறைவேறிவிட்டது. சென்னை அமைச்சர்கள் கேட்ட திருத்தம் அமுலுக்கு வரப் போகிறது!

இச்செய்திகளைப் பார்க்கும் யாரும், சென்னை வகுப்புவாரி உத்தரவு மீண்டும் பழையபடியே நடைமுறையில் வரும் என்றுதான் நினைப்பார்கள். ஆனால் உண்மை என்னவோ, வேறு திசையில் வெளிச்சம் போடுகிறது!

அமைச்சர்கள் இம்மாதம் 11-ம் தேதி கூடப்போகிறார்களாம்; கல்லூரி அனுமதிக்குப் புது விதிகளை வகுக்கப் போகிறார்களாம். வகுப்புவாரிச் சட்டம் செல்லாதது செல்லாததுதானாம். புது விதிகளை வகுக்க வேண்டுமாம். பிற்போக்கு வகுப்பினருக்கு ஸ்தானங்களை ஒதுக்க மட்டுமே அரசியல் திருத்தம் இடமளிக்கிறதாம்! இப்படிச் செய்திகள் பத்திரிகைகளில் வருகின்றன. வகுப்புவாரிச் சட்டம் நேருவின் திருத்தத்தால் நிலைநிறுத்தப்பட்டுவிடும்; மீண்டும் சமூக நீதி தழைக்கும் என்று கனவு கண்டவர்கள் ஒரே ஏமாற்றத்தைத்தான் இந்தச் செய்திகளில் காண்கிறார்கள்!

ஏன் இந்த ஏமாற்றம்? சென்னை அமைச்சர்கள் "கம்யூனல் ஜி. ஓ." நடைமுறையில் இருக்குமாறு அரசியலைத் திருத்த வேண்டுமென்று நேருவிடம் கோரினார்களா, இல்லையா? அல்லது கிளர்ச்சிகளை ஒடுக்கப் பூசிமெழுகும் வகையில் ஏதோ திருத்தம் செய்துவிடுங்கள் என்று சாடை காட்டிவிட்டு வந்தார்களா? நேரு பார்லிமெண்டில் பேசிய பேச்சுக்களிலிருந்து நாம் சில உண்மைகளைத் தெரிந்துகொள்ள முடிகிறது. அவர், பிற்போக்கு வகுப்பினருக்கு உதவும் ஆர்வம் படைத்தவராகவே காணப்படுகிறார். அவர்களுக்கு வேண்டிய வசதிகள் அளிக்க வேண்டுமென்று மனப்பூர்வமாக

எண்ணுகிறார். இப்படி எண்ணுகிற மனிதர் ஏன் அரைகுறையான திருத்தத்தைக் கொண்டுவந்து, "கல்யாணம் கட்டியும் பிரம்மசாரி" என்ற அவல நிலைக்குச் சென்னையை ஆட்படுத்தியிருக்கிறார்? இங்கேதான் பொதுமக்களுக்கு விளங்காத புதிர் இருக்கிறது. ஒன்று, சென்னை அமைச்சர்கள் வகுப்புவாரி உத்தரவு அப்படியே அமுலில் இருக்கும்படி திருத்தம் செய்யுமாறு வற்புறுத்தத் தவறியிருக்கலாம். அல்லது அங்கே திருத்தம் செய்த நிபுணர்கள், இத்தகைய 'பித்தலாட்டத்தைக் கைக்கொண்டிருக்கலாம். ஏனெனில், அரசியலமைப்புத் திட்டம் முதலில் வகுக்கப்படும் போதே, இந்த விதிகளை மறிப்பதற்காகவே சில பகுதிகளைச் சேர்த்திருக்கிறார்கள், சட்ட நிபுணர்கள். ஆகையால்தான், இப்போதும் பித்தலாட்டம் நடந்திருக்கலாமென்று நாம் ஐயப்பட நேருகிறது. நேருவின் எண்ணம் வகுப்புவாரி உத்தரவை ஆதரிக்கும் அளவுக்கு உயர்ந்திருக்கிறது. சட்ட அமைச்சர் அம்பேத்கார், சுப்ரீம் கோர்ட் நீதிபதிகளைக் காயும் அளவுக்கு வகுப்புவாரி உத்தரவைத் தாங்கிப் பேசியிருக்கிறார். டில்லி பார்லிமெண்டு இத்திருத்தங்களைப் பெரும்பான்மை வாக்குகளால் நிறைவேற்றித் தந்திருக்கிறது. இந்த ஆதரவுக்கெல்லாம் அடிப்படை, சென்னை வகுப்புவாரி உத்தரவு நிலைக்க வேண்டுமென்பதுதான் என்பதை யாரும் மறுக்க முடியாது. ஆனால், இந்தப் பெருத்த ஆதரவின் விளைவாகக் கிடைத்திருக்கிற திருத்தமோ, பிள்ளையார் பிடிக்கக் குரங்காய் முடிந்த கதையையே நினைவுபடுத்துகிறது!

திருத்தம் வந்தும் பயனில்லை என்ற போக்கில்தான், அமைச்சர் பக்தவத்சலம் பத்திரிகை நிருபர்களிடம் பேசியிருக்கிறார். பரிதாபமான நிலை! ஒரு பிரதம மந்திரி ஏமாந்திருக்கிறார்! ஒரு சட்ட அமைச்சர் ஏமாந்திருக்கிறார்! டில்லி பார்லிமெண்ட் ஏமாந்திருக்கிறது! சென்னை அமைச்சர் குழு ஏமாந்திருக்கிறது! சென்னை மக்கள் ஏமாந்திருக்கிறார்கள்! இவ்வளவு பேரையும் ஏமாற்றத் தக்க 'பித்தலாட்டம்' நிபுணர்கள் என்ற உருவிலும் ஆலோசகர்கள் என்ற உருவிலும் நடமாடுகிறதென்றால் நாம் வெட்கித் தலைகுனியவேண்டியதைத் தவிர வேறு பேச ஒன்றுமில்லை.

திருத்தம் எப்படி வரப்போகிறது என்று சென்னை அமைச்சர்களுக்குத் தெரியும். பொறுக்குக் கமிட்டியின் பரிசீலனையில் அந்தத் திருத்தம் ஒப்படைக்கப்பட்டிருந்தபோது சென்னை அமைச்சர்கள், தங்கள் சட்ட நிபுணர்களைக் கலந்தாலோசித்தார்களா? வரப்போகும் திருத்தம், வகுப்புவாரி உத்தரவை அமுல் நடத்த உதவுமா என்று கேட்டார்களா? கேட்டிருந்தால், நேருவிடம் மீண்டும் அவர்கள் தூது சென்றிருக்கவேண்டும். ஆனால்

அவர்கள் தூது செல்லவில்லை. சிலர் வாய் மூடி மௌனிகளாக இருந்தார்கள். "வகுப்புவாரி உத்தரவில் பொது மக்களுக்கு என்ன அக்கரை?" என்று மற்றும் சிலர் மேடைகளில் பேசினார்கள். நேரு திருத்தம் எப்படி நேரினும் சரி என்று தலைவிதி தத்துவத்தை உணர்ந்தவர்கள் போலவே நடந்துகொண்டார்கள்! இக்கொடுமைதான் நமக்கு 'அரைகுறை'ச் சீர்திருத்தத்தை வழங்கியிருக்கிறது!

வந்துள்ள திருத்தம் எப்படிச் சமூக நீதிக்கு உதவப்போகிறது என்பது சரிவரப் புரியவில்லை. மருத்துவக் கல்லூரி, பொறியியற் கல்லூரிகளில் குறிப்பிட்ட அளவு ஸ்தானங்களைப் பிற்போக்கு வகுப்பினருக்கு ஒதுக்கி வைக்க இத்திருத்தம் உதவுகிறது என்று பலர் கூறுகிறார்கள். இத்திருத்தம் புதுச் சட்டப் பிரச்னைகளை உண்டாக்கக்கூடும் என்று சிலர் அஞ்சுகிறார்கள். பிற்போக்கு வகுப்பினர் யாவர் என்று தீர்மானிப்பதில் சங்கடங்கள் எத்தனையோ எழும். சென்னை சர்க்கார் சிலரைப் பிற்போக்கு வகுப்பினர் என்று குறிப்பிடுவார்கள். அவர்கள் பிற்போக்கு வகுப்பினரல்ல என்று நீதி மன்றத்தில் வாதாடச் சட்ட நிபுணர்கள் முன் வரமாட்டார்களென்று எப்படிக் கூற முடியும்! முன்பு சென்னை சர்க்கார் மொத்த ஸ்தானங்களை எல்லோருக்கும் பங்கிட்டுச் சமநீதி வழங்கினார்கள். சமநீதியைக் கருத்தில் கொண்டதால் எல்லோருக்கும் அவரவர்களுக்கு நியாயமான வீதாசாரம் கிடைத்தது. யாரையும் ஒதுக்கவில்லை, அப்போது. இப்போதுள்ள நிலைப்படி, குறிப்பிட்ட அளவு பிற்போக்கு வகுப்பினருக்கு ஒதுக்க முடியுமென்றால், பிற்போக்கு வகுப்பினரில் பல பிரிவுகள் உண்டே, அவர்களைத் தனித் தனியாகக் காட்டி ஒவ்வொரு பிரிவுக்கும் தனித் தனி அளவு ஸ்தானம் உண்டு என்று கொடுக்க முடியுமா? சமமாகப் பங்கிடுவது, மக்கள் எண்ணிக்கைப்படி வழங்குவது என்ற முறைதான் உகந்தது. சென்னை அமைச்சர்கள் என்ன திட்டமிட்டிருக்கிறார்களோ?

கூடி, விதிகளை வகுக்கப்போகும் அவர்கள் பொறுப்பு மிகப் பெரிது. புது நடைமுறையை அவர்கள் கொண்டுவரப்போகிறார்கள். அந்த நடைமுறை நாட்டில் பெரும்பான்மையினராக வாழும் பழங்குடி மக்களுக்குக் கைகொடுத்துதவும் நடைமுறையாகவே அமையவேண்டும். அரசியல் திருத்தம் இடந்தரவில்லையென்றால், மறு திருத்தம் அவசியம் என்றாகுமே ஒழிய, சமூக நீதியை மக்கள் இழக்கும்படி செய்வது பெருந் தீமையிலேயே முடியும். சட்டத்திற்காக மக்கள் அல்ல; மக்களுக்காகவே சட்டம் என்பதைச் சென்னை அமைச்சர்கள் உணர்வார்களானால், அவர்கள் தங்கள் கடமையை நிறைவேற்றத் தயங்கமாட்டார்கள்.



[கொரியா, காஷ்மீர் முதலிய பிரச்னைகளோடு, பாரசீகப் பிரச்னையும் ஐ. நா.வின் திருப்பார்வைக்கு வரலாம்]

காலமும் கருத்தும்

கொரியா

கொரியாவில் போர் முடிந்து விடலாம் என்பதற்கான அறிகுறிகள் தட்டுப்படுகின்றன. சண்டை ஏனோதானோவென்று தான் நடந்துவருகிறது. இரு தரப்பாருக்கும் வலுவாகப் போரை நடத்தவேண்டுமென்று அக்கரை இருப்பதாகத் தெரியவில்லை. இன்னும் எத்தனை ஆண்டுகள் நடத்தினாலும், யார் பக்கம் வெற்றி, யார் பக்கம் தோல்வி என்று கொரியாப் போரில் தீர்மானிக்க முடியாதென்பதை வல்லரசுகள் உணர்ந்திருக்குகின்றன. இந்த உணர்வு சலிப்புணர்ச்சியை உண்டாக்கியிருக்கிறது. போரில் ஏற்பட்ட அலுப்பும் சலிப்புமே, சமாதானப் பிரச்னையில் கண்ணோட்டத்தைச் செலுத்த வைத்திருக்கின்றன. அமெரிக்கா மக் ஆர்தர் நீக்கத்திற்குப் பிறகு, தன் நிலையில் மிகவும் தளர்ந்திருக்கிறது! கம்யூனிஸ்ட் சீனாவும், வடகொரியாவும், போரைப் பெரும் போர் ஆக்கும் அளவுக்குத் தங்கள் வலிமையைக் காட்டத் தயாராக இல்லை. ரஷ்யா போரில் கலக்கவே இல்லை. இச் சூழ்நிலை கொரியாவில் சமாதானத்தை ஏற்படுத்தி விடுமானாலும் நாம் ஆச்சரியப்படுவதற்கில்லை.

பாரசீகம்

கொரியாவில் வல்லரசுகள் சலிப்படைவதற்கு இன்னொரு காரணமும் உண்டு. பாரசீகத்தில் அவர்கள் கவனம் திரும்பும்படியாக அங்கே மாறுதல்கள் நிகழ்ந்து கொண்டிருக்கின்றன. கொரியாவில் அமெரிக்காவுக்கு அக்கரை இருந்தது! பாரசீகத்திலோ பிரிட்டனுக்கு அக்கரை இருக்கிறது! பாரசீக எண்ணெய்த் தொழிலைத் தேசிய மயமாக்குவதற்கு, ஈரான் அரசாங்கம் திட்டமிட்டிருக்கிறது! பிரிட்டிஷ் கம்பெனியொன்று இத்தனை ஆண்டுகளாக அனுபவித்து வந்த ஏகபோக உரிமை இந்தத் திட்டத்தால் பறிபோகிறது! எனவே பிரிட்டனுக்குக் கோபம் வருகிறது! முதலில் மிரட்டிப் பார்த்தது; பாரசீகம் பணிவதாகத் தெரியவில்லை. இப்போது பிரிட்டன் சமாதானம் பேச முன்வருகிறது. "தேசியமயமாக்கும் திட்டத்தை ஒப்புக்கொள்கிறோம்; ஆனால் வினியோக உரிமை எங்களுக்கு வேண்டும்" என்று ஒரு படி கீழே இறங்கியிருக்கிறது. பிரிட்டன் போக்கைக் கவனிக்கும்போது பாரசீகத்தில் தகராறு முற்றாது என்ற முடிவுக்கே நாம் வரலாம்.

காஷ்மீர்

தீராத வல்வினையைத் தீர்த்து வைக்கும் கடவுளர்கள் உண்டு

என்று பக்தகோடிகள் சொல்லக் கேட்டிருக்கிறோம். ஆனால் ஐ. நா. சபை தீர்த்துவைக்க முடியாத பிரச்னையும் உண்டு என்று காஷ்மீர் நமக்கு நினைவு படுத்திக்கொண்டே இருக்கிறது. பாகிஸ்தான் பக்கம் அமெரிக்காவும் பிரிட்டனும் சேர்ந்துகொண்டு தாளம்போடுகின்றன! ஐ. நா. சபைகூடப் பாகிஸ்தான் பக்கம் பேசுவதாகவே தெரிகிறது! அப்படியிருந்தும் இந்தியா காஷ்மீர் விஷயத்தில் காட்டும் உறுதி போற்றத்தக்கது தான்! ஆனால் காஷ்மீர், கொரியா போன்று ஆதிக்கக் களமாக மாறாதபடி பார்த்துக்கொள்ள வேண்டிய பொறுப்பு இந்தியப் பிரதமரையும் பாகிஸ்தான் பிரதமரையும் சார்ந்திருக்கிறது! தங்களுக்குள் சமாதானம் செய்துகொள்வது எவ்வளவு நன்மை பயக்கும் என்பதை அவர்கள் இன்னும் உணராமலிருப்பதுதான் விந்தையாயிருக்கிறது! காஷ்மீரம் அழகான நாடு; ஆனால் அழகுடன் ஆபத்தும் சேர்ந்திருக்கும் என்பது பெரியவர்கள் வாக்கு. அந்த வாக்குப் பொய்யாகும்படி செய்யவேண்டிய பொறுப்பு நேரு, லியாகத் கையில் இருக்கிறது! அமெரிக்கா, பிரிட்டன் முதலிய வல்லரசுகளின் மேலுள்ள காதல் நீங்கினால் ஒழிய இந்தப் பொறுப்பை அவர்கள் உணரமுடியாது!

பொழுது போக்கு

ஓர் இரவு

பல இரவுகளாக எதிர்பார்த்துக் கிடந்த 'ஓர் இரவு' இப்பொழுது தமிழ் நாடெங்கும் ஓடிக்கொண்டிருக்கிறது. அண்ணாவின் வசனங்கள் பத்திரிகைகளிலும் போஸ்டர் விளம்பரங்களிலும் கூடச் சுடர்விடுகின்றன. படத்தைப்பற்றி எல்லாப் பத்திரிகைகளும் விமரிசனம் எழுதியிருக்கின்றன. விளம்பரத்திற்காக ஒரு விமரிசனம், ஏவியெம்மின் முகத்திற்காக ஒரு விமரிசனம், அண்ணாவின் வசனங்களுக்காக ஒரு விமரிசனம், கற்பனை—கதை—கலை இவற்றை அணுகிப் பார்த்த விமரிசனங்கள்......இம்மாதிரிப் பலவேறுபட்ட தராசுகளில் வெவ்வேறு எடைக் கல்லைப் போட்டு 'ஓர் இரவை' நிறுத்துப் பார்த்துவிட்டார்கள்.

'ஓர் இரவு' எதிர்பார்த்த அளவிற்கு வெற்றியளிக்கவில்லை என்கிறார்கள். இது உண்மை! அப்படியென்றால் ஏவியெம்மிற்கு இது ஒரு தோல்வி என்றுதான் சொல்லவேண்டும். 'வேலைக்காரி'யோடு ஒப்பிட்டுப் பார்க்கும் சினிமா ரசிக உள்ளங்களில் 'ஓர் இரவை'ப் பார்த்த பிறகு ஏமாற்றத்தின் சாயல் படியாமல் இராது. 'நாம் இருவர்' 'வாழ்க்கை', வரிசையோடு 'ஓர் இரவை' வைத்துப் பார்க்கும் பட முதலாளிகளுக்கும் இது பெரிய ஏமாற்றமேயாகும். இது ஏன்? இதற்கு என்ன காரணம்? கே. ஆர். ராமசாமி, டி. எஸ். பாலையா போன்ற நல்ல குணச்சித்திர நடிகர்கள் நடித்தும், அண்ணாவின் தெறிக்கும் வசனங்கள் கதையை அழகுபடுத்தியும், பாரதிதாசனின் 'துன்பம் நேர்கையில் யாழெடுத்து இன்பம் சேர்க்கும்' பாடல் படத்துக்கு இனிமையூட்டியும் 'ஓர் இரவு' சோபையிழந்து, விறுவிறுப்பில்லாமல் போனதேன்?

"'ஓர் இரவில்' அண்ணாவின் கதை இருக்கிறது. ஆனால் அவரது உள்ளம் இல்லை" என்கிறது ஒரு குரல்! ஆம். இது உண்மை! 'வேலைக்காரி'யைப் பார்க்கும் பொழுது, ராமசாமியின் உருவில் அண்ணாவே நடிப்பதாக உணர்ந்தோம்! அண்ணாவின் கருத்துக்கள் நன்றாக எடுத்துக் காட்டப்பட்டன. அதனாலேயே அப்படம் நல்ல வெற்றி பெற்றது.

தனிப்பட்ட ஒரு சிலரின் உள்ளங்களைத் திருப்தி செய்வதற்காகவே, கதையை முன்னும் பின்னும் குழப்பி, சினிமாவுக்

கேற்ற முறையில் என்று செப்பிடு வித்தை காட்டி அலங்கோலமாகக் கத்தரிக்கோல் பிரயோகம் செய்து குட்டிச்சுவராய் அடித்திருக்கிறார்கள். இருந்தும், சுறா மீனைப்போல் அண்ணாவின் வசனங்கள் ஆங்காங்கு எகிறிக் குதிக்கின்றன.

இன்னொன்று: முக்கிய பாத்திரங்களில் இரண்டு பேர்கள் மட்டும் நல்ல நடிகர்களாய் இருந்துவிட்டால் போதாது. நடிகர் தேர்தலில் படத் தயாரிப்பாளர்கள் பெருந் தோல்வி கண்டிருக்கின்றனர். பண வசூலுக்காகவோ அல்லது செக்ஸ் அப்பீல் இல்லாவிட்டால் ரசிகர்கள் சிந்தை வருந்துமென்றோ, கதையின் முக்கியப் பெண் பாத்திரத்திற்கு ஆட்டக்காரி லலிதாவை அமர்த்தியிருக்கிறார்கள்.

உணர்ச்சி நிறைந்த வசனங்களை அவர் ஒப்புவிக்கும் பொழுது, "ஐயோ, அண்ணாவின் வசனமே'' என்று அனுதாபம் ஏற்படுகிறது. இதற்கு முன் நடிப்பதாக இருந்த எஸ். வரலட்சுமியோ, பி. கே. சரஸ்வதியோ லலிதாவை விடப் பத்து மடங்கு மேல்!

படத்திலே வரும் 'டியாலோடான்ஸ்' வெகு வெகு மட்டம்! மதுரைப் பக்கங்களிலே தெருக்களில் ஆடி வரும் 'கோமாளி-சவண்டைக்கா'க் கூத்தை நினைவு படுத்துகிறது அது. நாகேஸ்வரராவ் 'ஓர் இரவில்' நடிக்கிறாரா என்பதைப் பார்த்துத்தான் தெரிந்துகொள்ளவேண்டும்!

தங்கம் டாக்கீஸ்

தங்கம் டாக்கீஸ் சென்னையில் அண்மையில் தொடங்கப்பட்டுள்ள புதுத் தியேட்டர். அழகிய இத்தியேட்டர் எல்லா வசதிகளும் பொருந்த நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது. திருவொற்றியூர் ஹைரோடில், புது வண்ணாரப் பேட்டை டோல்கேட்டுக்கு அருகிலுள்ள இத்தியேட்டரை 19—5—51 அன்று சென்னை கார்ப்பரேஷன் ஸ்பெஷல் என்ஜினியர் திரு. பி. ராமசாமி திறந்து வைத்தார். வட சென்னை வாசிகளுக்குத் தங்கம் டாக்கீஸ் ஒரு புதிய வசதியாகும்.

இன்னொரு காட்சியில் பரமசிவனும் பார்வதியும் நடனமாடிக்கொண்டே பொதுவுடமையைப் போதிக்கின்றார்கள்! கேலிக் கூத்து! இதைப் பார்த்துவிட்டு ஒரு பிரகஸ்பதி "ஆஹா! அண்ணாவே சிவனையும் சக்தியையும் ஒப்புக்கொண்டுவிட்டாரே! என்ன இருந்தாலும் ஆஸ்திகம் ஆஸ்திகம்தான்!'' என்று ஆனந்தப் பரவசப்படுகிறார்!

புரட்சிகரமான கருத்துக்களுள்ள ஒரு கதையை வெறும் பொழுது போக்குப் படமாக ஆக்கிவிட நினைத்ததன் பயன்தான் 'ஓர் இரவு' விறுவிறுப்புக் குறைந்துவிட்டது. அண்ணாவின் கருத்துக்கள் எரிமலை போன்றவை. அவற்றைக் கையாளுவதில் தயாரிப்பாளர்கள் பெருந் தோல்வி அடைந்திருக்கின்றனர். எனினும் படத்திலே நாம் பார்த்துத் தெரிந்துகொள்ள வேண்டிய படிப்பினைகள் நிறைய உள்ளன. அவசியம் 'ஓர் இரவு' பார்க்கவேண்டிய படம்.

—இனியன்

பேசும் பதுமை

நாரா நாச்சியப்பன்

அன்புள்ள அத்தானே ஆருயிர்க்குத் தோழமையாய்
இன்பத்தைச் சேர்த்துவைத்த என்னருமை அத்தானே!
பெற்றதாய் நாட்டைப் பிரிந்து கடல்கடந்தே
உற்ற துணையென்றே உங்கள்கைப் பற்றிவிட்ட
என்னைவிட்டுக் கப்பலிலே ஏறிப் பிறநாடு
சென்றதெல்லாம் வாழ்வின்பம் சேர்க்கும் பொருள்சேர்க்க
என்றெண்ணி யென்னுள் எழுந்த துயர்க்கடல்மேல்
நம்பிக்கைக் கப்பலிலே நான்மிதந்தேன்; இப்பொழுதோ
துன்பப் பெருஞ்சுழல்தான் தோன்றியந்தக் கப்பலினை
ஆட்டி அலைப்பதுவும் அந்தக் கடல் அலையை
நீட்டி விழுங்கிவிட நிற்பதுவும் கண்டேன்றன்
உள்ளம் துடித்ததுவால்! ஊரெல்லாம் தூற்றுகின்ற
வெள்ளைப் பழியால் வெதும்பிவிட்டேன் என்னத்தான்!
அழகுமுல்லை தானிருக்க ஆவாரை கொய்து
குழல்மீது சூடிவரும் கோதையர்போல், வெண்கலத்தின்
நல்லோசை தாம்வெறுத்து நாட்டில் இரும்படிக்கும்
வல்லோசை தன்னை மணியென்பார் போல,
மனங்கலந்த என்னை மறந்துவிட்டு வேற்றூர்
இனமங்கை தன்னெழிலில் ஈடுபட்டு விட்டீராம்!
ஆவித் துணையென்றே அன்புக் கலப்பென்றே
பாவி யெனைமதித்தால் பாரென் றழகுடையார்
கூவி யழைத்தாலும் கொள்ளைப்படு மோநெஞ்சம்?
இங்குத் தனியாய் எரியும் விளக்கொன்று
மங்குமுனம் நெய்யூற்ற வாரீரோ என்னத்தான்!
தூற்றும் பழிக்காற்றில் நெஞ்சம் துடித்தாலும்
ஊற்றுமன்பு நெய்யால் உயிர்பெற்று வாழ்ந்திடுவேன்.
ஊர்ப்பழியின் பொய்ம்மை யுணர்த்தி உயிரளிக்க
நேர்ப்படுவீர் என்றெண் நினைப்பு.

* * * *

அன்புக் கினியாளே ஆருயிர்க் காதலியே
துன்பமெனும் மைக்கூட்டில் தோய்த்தெடுத்த பேனுவால்
நீயெழுதி யுன்னன்பு நெஞ்சுற்ற துன்பமெலாம்
வாய்திறந்து சொல்வதுபோல் வந்த தொருமடங்கல்.
ஊரார் உரைப்பதிலே உண்மை யுளதெனினும்
காரணத்தை நீயறிந்தால் கண்ட துயர்நீங்கும்.
மீன்விழியில் அன்பு மினுமினுக்க நீவந்து
தேனிதழில் மின்னல் திருநடனம் ஆடிவர

என்னருகில் வீற்றிருந்தே இன்பக் கதைபேசி
உன்நெஞ்சும் என்னெஞ்சும் ஒன்றாக்கி வைத்ததெலாம்
நான்மறந்தேன் என்பதுதான் நம்பத் தகாததுவாம்.
உன்னைப் பிரிந்திந்த ஊர்வந்த நாள்முதலாய்
என்னெஞ்சில் நீயே இருப்பாளுய்! சற்றும்
மறந்திருக்க மாட்டாமல் நானிருந்த போது
சிறந்த அழகும் சிரித்த முகமுந்தான்
கொண்டாள் ஒருத்தி குறுக்கிட்டாள்; நானவளைக்
கண்டேன்என் நெஞ்சம் கரைந்ததுகாண். ஏனென்றால்,
அந்த விழியிரண்டில் ஆடிவந்த துன்விழிகள்!
சிந்துமவள் புன்னகையில் முல்லைச் சிரிப்புடனே
உன்பவள வாய்கண்டேன், ஒய்யாரப் பல்கண்டேன்!
என் மனந்தான் உன்நினைவை ஏற்குமெனில் அன்னவளைப்
போயணைவேன் இன்பம் புரிந்திடுவேன், மற்றங்கு
நீயே அவளுருவில் நிற்கும்நிலை கண்டேனல்
உன்னை மறந்தேனென் றாரார் உரைப்பதுதான்
பொன்னே யழிந்திடுக பொய்!

* * * *

கடல்கடந்து சென்றுங்கள் காதலியைக் கைவிட்டு
உடலின்பம் தேடுகின்ற உத்தமரே! வையத்தில்
பேதையென்று பெண்ணினத்தை யெண்ணும் பெரியாரே!
வாதை யினியில்லை வாழ்ந்ததெல்லாம் போதுமென
நஞ்சுநிறை கோப்பையிலே நலலின்பம் கண்டுவிட
நெஞ்சம் துணிந்துவிட்டேன், நீர்நன்றாய் வாழ்ந்திடுக!
சாகும் ஒருமாது சாற்றுமொழி கேட்டிடுவீர்
ஆகந் தழுவி அணைத்திருக்கும் இந்நாளைக்
காதலியை யேனும் கலங்கவிட்டு மற்றொருத்தி
காதலினைத் தேடுவதைக் கைவிட்டுக் கண்திறப்பீர்!
நாளைக்குச் சாய்ந்துவிடும் நல்லாற் றிடிகரையின்
நீள மரம்போல நிற்குமிந்த வாழ்க்கையிலே
நெஞ்சொடிந்து சாவதுதான் நேர்மையல்ல வென்றாலும்
வஞ்சகத்தில் சிக்கி வதங்குஞ் சிறுமலராய்,
நல்ல மடவார்கள் நானிலத்தில் உம்போன்ற
புல்லர் வசப்பட்டுப் போக்கிழந்து நிற்கின்றோம்.
பெண்ணுக் குணர்ச்சியுண்டு பேசும் பதுமையல்ல
எண்ணத்தில் வைப்பீர்! இனியேனும் நல்லறிவு
பெற்றுப் பசப்புமொழி பேசும் வழக்கத்தை
முற்றும் ஒழித்திடுவீர் மூன்!

புதிய புத்தகங்கள்

பெரிய இடத்துச் செய்தி (வாணிதாசன்)	0-4-0
தாய் (ரா. தனலன்)	0-4-0
மனைவி மாற்றம் (அன்புமணி)	0-8-0
தொழிலாளர் பிரச்னையில் அண்ணா	0-6-0
துன்பக் கதை (டி. கே சீனிவாசன்)	0-8-0
ஒரே அணைப்பு (சுப. இளங்கிரன்)	1-0-0
காதலன் (சுப. இளங்கிரன்)	0-4-0
களபலி (இராதா மணாளன்)	0-6-0
உணர்ச்சி மாலை (மு. கருணாநிதி)	0-8-0
யார் இந்த ம. பொ. சிவஞானம்?	0-4-0
ஆள்வோர் யார்? (ரா. தனலன்)	0-4-0
வாழ்க்கைச் சுழல்	0-6-0
அதிசயத் தியாகிகள்	0-12-0
இதோ! கடவுள் களஞ்சியம்! (எஸ். குருசாமி)	0-4-0
திருக்குறள் திருத்திற்று (பூவண்ணன்)	0-2-0

வியாபாரிகளுக்கு 25% கழிவு

5 ரூபாய்க்கு மேல் ஆர்டர் செய்தால், தபாற் செலவு இனாம்.

தனிப்பிரதி வேண்டுவோர் மணியார்டர் செய்ய வேண்டும்

செல்வ நிலையம்

110. A. P. ரோட்.

சென்னை-7

வைகறை வெளியீடு

பிரதி இங்கிலீஷ் மாதம் 15-ம் தேதியன்று

ஆசிரியர்

ஜெகசிற்பியன்

அவர்களால் எழுதப்பட்ட எட்டு அணா விலையுள்ள நாவல் வெளிவரும்

15—6—51-ல் வேலைவில்லாளன் எழுதிய "முழுமதி" வருகிறது

ஏஜண்டுகள் தேவை:

25% கழிவு கமிஷன் கழித்து முன்பணம் அனுப்பினால் எங்கள் செலவில் அனுப்பப்படும்

"வைகறை" வெளியீடு

திருப்பாதிரிப்புலியூர்.

போன்: 88107

பிரபாகர்

எலக்ட்ரிகல்ஸ்

எல்லாவிதமான எலக்ட்ரிக் வேலைகளும் செய்கிறோம். காண்ட்ராக்டுகளும் ஏற்றுக் கொள்ளப்படும்.

14, உஸ்மான் ரோடு

தியாகராய நகர் :: சென்னை—17

இசையும் இரைச்சலும்

நா. பாண்டுரங்கன்

"பூமியின் மேற்பரப்பில் முக்கால் பங்கு நீர்; கால் பங்கு நிலம்!"—ஆர்வமோ அவசரமோ இல்லாமல் அழுத்து அயர்ந்து படித்துக்கொண்டிருந்தாள் நீலகேசி. அவர் இன்னும் வீடு திரும்பாததால், அதுவரை என் மனதில் சதிராடிக் கொண்டிருந்த சஞ்சலத்தை எதிர்த்து நிறுத்தி விட்டு இந்தக் கற்பனையை உதிர்த்துவிட்டது அவள் படித்த அந்த வாக்கியம்.

'உலகில் கண்ணீர்தான் முக்கால் பங்கு; கால்பங்கே களிப்பு'— இந்த உண்மையைத்தான் இயற்கை தன் தரையையும் தண்ணீரையும் கொண்டு பறைசாற்றச் சொல்லியிருக்குமோ? படித்துக் கொண்டிருந்த நீலகேசியை என் பார்வை படித்துக்கொண்டிருந்தது. பிறர் படுப்பதற்காக—தான் நின்று கொண்டிருக்கும் மெத்தை விரித்த கட்டில்—தன் இடத்தை விட்டுத்தான் இயங்காமல், தன் இடத்தை விடாது தன்னையே இயக்கிக் கொண்டிருக்கும் கடிகாரம்—இந்த இரண்டும் கேசியின் ஒரு கையை பிடித்துப் பலமாகத் தூக்கத்தை நோக்கி இழுத்தன. சுருண்டு வளைந்து துண்டாகிவிட்ட நேர்கோடு! அதை எண்ணாகக் காட்டி பார்ப்பவரின் மனதில் உடனே கூட்டல் கழித்தல் போடவைக்கும் எதிரே மாட்டியிருந்த தேதித்தாள்!! — தம் அகங்களை மூடிக்கொண்டு அடுக்காகப் பக்கத்தில் இருந்த புத்தகங்கள் — இந்த இரண்டும் அவளின் மற்றொரு கையைப் பிடித்துப் பலமாக துக்கத்தை நோக்கி இழுத்தன. தூக்கத்துக்கும் துக்கத்துக்கும் இடையில் சிக்கித் திணறித் திண்டாடும் சிறுமியை நினைத்ததும் என்னிடம் சிரிப்புத்தான் பொங்கியது. படித்து முடிக்க வேண்டிய கடமையை விட பயமுறுத்தல் நிறைந்த என் கண்டிப்புத்தான் அவளின் இந்த நிலைக்குக் காரணம். இல்லாவிட்டால் அவள் எப்பொழுதோ இந்தக் கடமைக்குத் துரோகம் செய்துவிட்டு, காதலாகிய தூக்கத்துடன் கைகோர்த்துக் கொண்டு நெடுந்தூரம் ஓடிப் போயிருப்பாள்......

"கேசி! படுக்கப்போ! படித்தது போதும்! பரீட்சைக்கு நாளையிலிருந்து பார்த்துக்கொள்ளலாம்!"

—தூக்குத் தண்டனை விதிக்கப்பெற்ற கைதியைச் சிறையில் தள்ளிப் பூட்டிவிட்டுக் கதவுக்கு வெளியே நின்று ஒரு கணம் கழித்து வந்து 'உனக்கு விடுதலை' என்று சொல்லிக்கொண்டே கதவைத் திறந்தால் கைதியின் முகம் எப்படி

இருக்கும்? கருத்து என்ன சொல்லிக் கொண்டிருக்கும்? புத்தகத்தைக் கைகள் தாமாக மூடும் கேசியின் முகத்தில் இந்தக் கேள்விகளுக்குப் பதில் கிடைத்தது! அவள் முகம் புன்னகையால் விரிந்து மலர்ந்தது. நான் சிரித்தேன். அதைப் பார்த்து அல்ல — என் மனதில் சற்றுமுன் தோன்றிய கற்பனையை எண்ணியதால். 'கைதி—தூக்குதண்டனை — விடுதலை— கோர்ட்...' வக்கீலின் மனைவிக்கு மனமும் வக்கீலுக்கு இருப்பது போலவே இப்படி மாறிவிட்டது எப்படி என்று நினைத்ததும் – சில கேள்விகள்! அவை கேள்விகளாகவே எப்போதும் இருப்பதால்தான் ஆச்சரியமும் ஆனந்தமும் அளிக்கின்றன. பதிலைப் பெற்றுவிட்டாலோ, அவை பருத்துப் பெருத்துக் கவர்ச்சியூட்டிய பலூன் காற்று நீங்கி சுருங்கிச் சுருண்டுவிட்டது போல் ஆய்விடுகின்றன. ஆகையால், 'என் மனம் எப்படி இப்படி மாறிவிட்டது' என்றகேள்வி கேள்வியாகவே இருக்கட்டும் என்று அதற்குப் பதிலைப் பெற முயலும் எண்ணத்தையே விரட்டி விலக்கிவிட்டேன்.

"அம்மா! அப்பா ஏன் இன்னும் வரலே?"

—என் உள்ளத்திலே கூடிக் குதித்துக்கொண்டிருந்த வருத்தமும் குழப்பமும் கேசியின் நாவால் வாக்கியஉருவெடுத்து வெளிவந்தன! கட்டிலிலிருந்து குதித்து என்னிடம் ஓடி வந்த கேசியை நாற்காலியிலிருந்து எழுந்து நின்றபடியே நிறுத்தி அணைத்துக்கொண்டேன்...

..."ஏதோ வேலை!" என்று நான் சொன்ன காரணம் கிடைத்துவிட்டதால் நிம்மதியான கேசியை ஆழ்ந்த தூக்கம் அணைத்துக்கொண்டுவிட்டது. இரவு ஒன்பது மணிக்கு மேல் ஆகிவிட்டது. காலை பத்து மணிக்குக் கோர்ட்டுக்குப் புறப்பட்டவர் இன்னும் திரும்பவில்லை......

'ஏதோ வேலை!' — என் வாய் முணுமுணுத்தது.

'என்ன அப்படிப்பட்ட வேலை?'—என் கோபம் இப்படிக் கேட்டது.

'ஏதாவது விபத்து...'—என் பயம் இப்படி எண்ணியது.

'அதெல்லாம் ஒன்றும் இருக்காது!'—என் ஆசை இப்படிக் கத்தியது.

'பின்னே?'—சந்தேகம் இப்படி எழுந்தது.

'அலட்சியம்! ஆமாம். நான் ஒருத்தி இங்கே எதிர்பார்த்து ஏங்கி, காத்துக் கவலையுடன் இருப்பேன் என்பது கணப்பொழுதாவது அவருக்கு மனதில் தோன்றினால்தானே?'— தோல்வி மனப்பான்மை இப்படி இழுத்தது.

'வரட்டும்! இனிமேல் இதற்கொரு முடிவு கட்ட வேண்டும்'– ஆத்திரம் இப்படி முடிவு கட்டியது.

'வரவில்லை! அவர் இன்னும் திரும்பவில்லை. இதென்ன தொல்லை!'—சலிப்பு, சிந்து பாடியது.

படுத்தல்—சாய்ந்திருத்தல்—உட்கார்ந்திருத்தல்.......எல்லாம் என் உடலைத் தம் வயப்படுத்திப் பார்த்துத் தோற்றுவிட்டன. சிட்டாகப் பறந்து, பருந்தாக உயர்ந்து, வண்டாகச் சுற்றி, வௌவாலாக அலைந்து, குலைந்தே விடும்போல் ஆகிவிட்டது என் உள்ளம். அறையிலிருந்து எழுந்து வந்தேன். கால்கள், தாழ்வாரத்துக்கு எல்லை கட்டும் கைப்பிடிச் சுவர் அருகில் வந்ததும் நின்றுவிட்டன; கைகள் சுவரின்மீது சாய்ந்துகொண்டன; கண்கள் எதிரில் வெளியே பாய்ந்து சென்றன! ஆனால், கருத்தோ...நான் இருந்தது உயரத்தில், மாடியில்—ஆகையால் எதிரே கீழே சற்று தூரத்திலிருந்து விட்டுவிட்டு வரிசை வரிசையாய் ஒட்டி வைக்கப்பட்டிருந்த அந்த வீடுகள்!—சிதறிக் கிடந்த விளக்கொளியில் அவை சாதாரணமாக இல்லாமல், என் கண்களுக்குச் சற்று காட்சியை உண்டாக்கித் தந்தன. காலம் இரவாக இருந்து அந்தக் காட்சிக்கு நல்ல கவர்ச்சியைப் பூசியது. கீழே நான் இருந்திருந்தால் இந்தக் காட்சியை இழந்திருப்பேன். காரணம் அந்தக் காட்சியில் நானே ஒரு பகுதியாகிக் கலந்திருப்பேன். எதையுமே விட்டு விலகி எட்டி உயரே இருந்து விழிகளை விரித்து வைத்துக்கொண்டிருந்தால்தான் விநோதங்கள் எதிரே விளையாடுகின்றன! என் நினைவு சிரித்தது. நான் உயரே இருப்பதற்குக் காரணம், ஒன்றை ஒன்று தொட்டு ஒட்டிக்கொண்டு தங்களை அறியாமல் தரையையும் மாடியையும் இணைக்கும் அந்தப் படிகள்!—வாழ்வில் எல்லாருக்குமே இந்தப் படிகள் எங்கே கிடைக்கின்றன?......

தரையிலிருந்த என் பார்வை எழுந்து அடிவானத்தில் உறைந்தது. விசிறியைப்போல் எதிரே விரிந்து பரந்த வானம்! இல்லை இல்லை—விரித்து வைத்த தோகை! அதில் பரவிக்கிடந்த நட்சத்திரங்கள் — அல்ல — தோகையில் பதித்து வைத்த விழிகள்! உலகம்தான் உடல். உலக மயில் தோகையை விரித்திருக்கிறதே தவிர, ஆடவில்லை! என் மனத்திலிருந்த களிப்பு மயிலும் தோகையை விரித்து வைத்து, கார்மேகங்களை எதிர்பார்த்துக் காத்துக் கவலைப்பட்டுக்கொண்டிருக்கிறது!...

என்னைப்பற்றிய நினைவுதான் எப்போதும் அவர் கருத்தை முழுவதும் நிரப்பி வைத்துக்கொண்டிருக்கிறது என்று நான் நினைத்துக் கொண்டிருக்கிறேன். அவர் தன் காலத் தாழ்விற்கு எனக்குச் செய்தி அனுப்பாததிலிருந்து இது பொய் என்று ஆகிறது. ஆனால் மாறாக, அவரைப்பற்றிய நினைவுதான் என் மனத்திரை முழுதும் விட்டுவிடாமல் விழுந்து கொண்டிருக்கும் நிழல் படமாக நிறைந்து நிற்கிறது. அழுத்தி

ஒரே இடத்தில் ஊன்றி வைத்துக் கொண்டிருந்த கைகளில் சிறிது வலியெடுத்தது — ஒரு கையை வேகமாக நீட்டி உதறினேன். கலகலவென்று வளையல்கள் கதறின. வளையல்! அது தான்தான் கையைச் சுற்றி வளைத்துப் பிடித்துக் கொண்டிருப்பது போல் நினைத்துக் கொண்டிருக்கிறது. ஆனால் கைதான், தன்னைவிட்டு வேறு எங்கும் உருண்டு ஓடிவிடாமல் வளையலைப் பிடித்து வளைத்து வைத்திருக்கிறதென்பது அதற்குத் தெரிந்தால் தானே! எனக்கு இப்போது ஆறுதலளிக்கக் கூடியது என் மனநிலை போல் என்னிடமே இருக்கும் வளையலின் நிலைதான்!

உள்ளம் சோர்ந்ததால் உடல் சோர்ந்து திரும்பி அறையின் உள்ளே அடியெடுத்து வைத்தேன். எதிரே நின்றிருந்த நிலைக்கண்ணாடியிலிருந்த என் உருவம் என்னை உற்றுப்பார்த்து அப்படியே நிற்கவைத்து நினைவைத் தட்டிவிட்டது. நேற்று மாலை நடந்த அந்த நிகழ்ச்சிப் படத்தைக் கட்டி மூடியிருந்த திரை அறுந்து விழுந்தது. திரை நீங்கிய அந்தப் படம்! நினைவு நின்று நின்று ரசித்தது...வேடிக்கைப் பேச்சுக்கும் சிரிப்புக்கும் இடையில் மாலைச் சிற்றுண்டி சாப்பிட்டு முடிந்தது. நாற்காலியில் அவர்! எதிரே கட்டிலில் சாய்ந்து உட்கார்ந்து கொண்டு நான்! ஏதோ நினைவாக எங்கோ நிலைத்துவிட்ட அவர் விழிகள்! எங்கும் ஓடாமல் அவர் விழிகளில் நிலைத்துவிட்ட என் கண்கள்!—திடீரென்று பார்வையைச் சுழற்றி என்னைப் பார்த்தார். உடனே ஒலித்த என் குரலில் கோபம் துளிர்த்தது.

"பார்வை உங்களுக்குச் சரியாகத்தானே இருக்கிறது? சுவரில் அல்ல, நான் உட்கார்ந்திருப்பது கட்டிலில், உங்களுக்கு எதிரே!"

"நிரஞ்சனா! நீ பயப்படப் போகிறாய். உண்மையிலேயே இப்போது என் கண்ணில் உண்டாகியுள்ள கோளாறைச் சொன்னால்..." அவரிடமிருந்து வந்த இந்தப் பதில் என்னை நிமிர்ந்து உட்காரச் செய்து மனதில் பயத்தை விரித்துப் பரப்பியது.

"கண்ணில் கோளாறு?"— என் ஆச்சரியமும் அச்சமும் இந்த வினாவாகி என் குரல் முழுவதிலும் உருவம் எடுத்துக் கொண்டு விரைந்து வெளிவந்தன.

"ஆமாம் நிரஞ்சனா! கண்ணில் ஏதோ நிழல் படிந்து பார்வையைத் தடுக்கிறது!"

"எந்தக் கண்ணில்?"!

"இரண்டு கண்களிலும்!"

"இரண்டிலுமா?"

"ஆமாம்! நிழல் மாதிரி..."

"நிழலா?..."

"நெஞ்சில் எங்கும் நிரம்பியிருக்கும் சுமையின் நிழல்தான். நெஞ்சில் கனத்த பாரம்! கண்ணில் அதன் கருத்த நிழல்!"

நேரத்தை மறந்த மனம்—பகலாக்கிய இரவுகள் — திறந்த புத்தகங்களோடு போட்டியிடும் திறந்த கண்கள்! இதனால்தான்

அவர் கண்ணில்......கோளாறு! ஆனால் பேச்சில் இன்னமும் அவருக்கே உரித்தான அந்த அலட்சியம்! கோபம் பேசியது.

"வேதனையில் கூட உங்களை விளையாட்டுப் புத்தி விடவில்லை!"

"விளையாட்டில் கூட உன்னிடம் வேதனை ஒட்டிக்கொள்ளுமே அதைப் போலத்தான்!"

எண்ணம் எழுவதற்கு முன்பே நான் எழுந்து அவர் அருகில் விரைந்து பார்வையை அவர் இரண்டு கண்களிலும் மாறி மாறிப் பதித்தேன். அவர் கருவிழிகளின் நடுவின் உள்ளே இருந்துகொண்டு என் உருவம் தான் வெளியே இருந்த என்னைப் பார்த்து எதும் சொல்ல முடியாமல் வேதனைப் பட்டு வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தது.

"இன்னும் புலப்படவில்லையா உன் கண்களில்?"

"என் உருவம் தவிர எதும் இல்லையே உங்கள் கருவிழியில்!"

"உன் உருவமா தெரிகிறது?"

"ஆமாம்! நீங்கள் நிழல் படிந்திருப்பதாகச் சொன்னீர்களே!"

"நிரஞ்சனா! உன் உருவமல்ல அது. அதுதான் நான் சொன்ன நிழல். என் நெஞ்சில் நீ நிறைந்திருப்பதால்தான் கனத்த பாரமாய் இருக்கிறது. அந்தப் பாரத்தின் நிழல்தான்... நீ எழுந்து வந்து என் கண்ணில் அந்த நிழல் இல்லாத நேரம் எப்போதாவது உண்டா என்று கண்டுபிடி! முடியுமா உன்னால்?......"—பூத்த புன்னகை அவர் முகத்தில் புதைந்து மறையாமல் அப்படியே நிறைந்து நின்றது. நினைத்து, அது முடிவதற்குள் சிரித்து விட்டேன். மாலையில் அவர் திரும்புவதிலிருந்து இரவு படுக்கைக்குச் செல்லும் வரையில் வெறும் விஷயங்களை யெல்லாம் இப்படிப் பெரும் புதிர்களாக்கிக் காட்டும் அவர் வேடிக்கை! அவர் பங்களாவை விட்டு வெளிக் கிளம்பியதும் அது, கலர்ப் பட்டுப் புடவை கணப்போதில் சாயம் அவ்வளவும் மறைந்து வெளுத்துவிட்டால் எப்படி இருக்குமோ அப்படி ஆகிவிடுகிறது. அதனால்தான் அவர் இல்லாத ஒவ்வொரு நிமிஷமும்...

திடீரெனக் கீழே ஏதோ கூக்குரல் கேட்டது! நாடகக் காட்சிகளைச் சுவைத்துக் கொண்டிருக்கும்போது திடீரெனக் கூட்டத்தில் கலவரம் வெடித்தால், கொட்டகையில் கவனம் முழுதும் அங்கே திரும்புவதுபோல, கூக்குரல் வந்த பக்கம் என் நினைவு நெஞ்சம் எல்லாம் திரும்பி ஓடின. அவ்வாறு ஓடியவற்றைத் திரும்பிப் பிடித்து என் வயப்படுத்தி நிறுத்த, மாடிப் படிகளில் இறங்கிக் கீழே விரைவாக ஓடினேன்...

பிச்சைக்காரியோடு சண்டை போட்டுக்கொண்டிருந்தாள் வேலைக்காரி!

கதறிக்கொண்டே என் காலில் வந்து விழுந்து கும்பிட்ட பிச்சைக்காரி—அதட்டித் திட்டிக்கொண்டே அவளைக் கோலால் அடிப்பதை நிறுத்தாத வேலைக்காரி!

விஷயம் எனக்கு விளங்குவதற்குள் போதும் போதும் என்று ஆகிவிட்டது.

'சாப்பாடு இல்லை!' என்ற பதிலை வேலைக்காரியின் அலுப்பும் அயர்வும், கட்டளையாகவும் ஆத்திரமாகவும் உரத்த குரலில் கூவியிருக்கின்றன!

பிச்சைக்காரியின் வயிற்றைப் பிய்த்தெடுத்த பசியும் பங்களாவின் தோற்றமும் சேர்ந்து, கிடைத்த பதிலை மிதித்துத் துவைத்து வீணாகும்படிச் செய்துவிட்டன!

"திருட்டுக் கழுதே! நீ பிச்சைக்காரி இல்லை! எதையோ அகப்பட்டதைச் சுருட்ட இந்த அவ வேளையிலே வந்திருக்கே"—பிச்சைக்காரியை விரட்ட வேலைக்காரி இந்த வாக்கியத்தைக் காற்றுக் கிழிய வெளிப்படுத்தியிருக்கிருள்.

"வீட்டிலே ஏதாவது காணுமல் போனு, சந்தேகம் வெளியே இருந்து வர்ர பிச்சைக்காரி மேலே தோணுது அம்மா! உள்ளேயே இருக்கிற வேலை செய்றவங்க மேலேதான் உண்டாகும், ஆமாம்!"-பிச்சைக்காரியின் நெஞ்சில் இன்னமும் கொஞ்சம் ஒட்டிக்கொண்டிருந்த மான உணர்ச்சி இப்படி அவளையும் அறியாமல் பேச வைத்திருக்கிறது! மானத்திற்கு அஞ்சி வாழ்கிற வேல்ககாரியை, மானத்தால் அஞ்சி விடப்பட்டு வாழ்கிற கேவலம் ஒரு பிச்சைக்காரி இப்படிப் பேசுவதா? இந்த எண்ணம்தான் வேலைக்காரியின் கையில் கோலைக் கொடுத்துப் பிச்சைக்காரியின் முதுகில்...

என் நெஞ்சில் உண்டான உருக்கம், பிச்சைக்காரியின் தோற்றத்தில் இருந்த பரிதாபம், உள்ளே சமையலறையில் நிறைய இருந்த சாப்பாடு—இவ்வளவும் ஒரு புது நிகழ்ச்சியை உண்டாக்கின! நான் ஒரு வேடிக்கை செய்தேன்! அடித்த வேலைக்காரியை விட்டே பங்களா வெளித் தாழ்வாரத்தில் பிச்சைக்காரியை உட்கார வைத்து அன்னம் படைக்கச் செய்தேன்! சாப்பிட்டுக் கொண்டே இருந்த பிச்சைக்காரி, பக்கத்துப் பெஞ்சில் உட்கார்ந்து அதைப் பார்த்துக் கொண்டிருந்த எனக்கு இடையிடையே சகல சௌபாக்கியங்களையும் கொடுக்கும்படி ஆண்டவனுக்கு வார்த்தையால் மனுச் செய்துகொண்டிருந்தாள். என்னுடைய சௌபாக்யத்திற்காகச் செய்யப்படும் மனுவிற்குச் செவி சாய்க்கக்கூடிய ஆண்டவன், தன்னுடைய சௌபாக்கியத்திற்கு அவள் மனுச் செய்தால் செவி சாய்க்கமாட்டாரா என்பதுதான் எனக்குப் புரியவில்லை. இதை நானும் அவளைக் கேட்கவில்லை. அவளும் தன்னைக் கேட்டுக் கொண்டதாகத் தெரியவில்லை! பரிமாறிக்கொண்டிருந்த வேலைக்காரியை, தான் தவறிச் சொன்ன வாக்கியத்திற்கு மன்னித்து விடும்படி பலமுறை கெஞ்சி வேண்டினுள். மின்சார விளக்கு பச்சை நிற ஒளியைப் பரப்பிக்கொண்டிருந்ததால் அவள் முகத்தை அப்போது

தான் நன்கு உற்றுப்பார்க்கும் படி நேரிட்டது. உற்றுப்பார்த்தேன். பிச்சைக்காரியல்ல, பிச்சைக்காரப் பெண்! பார்க்கப் போனால் என் வயதே அவளுக்கும் இருக்கும். சுரீல் என்று என் மனதை ஏதோ சுட்டது! கிறல் விழுந்து ரசம் கலைந்து ஒளியிழந்த கண்ணாடியின் நினைவுதான், அவளை எண்ணியதும் என் மனதில் ஏற்பட்டது! என் ஆவலின் கண்கள், அவள் நெஞ்சின் உள்ளே புதைத்து வைத்திருந்த அவள் வாழ்க்கை 'டைரியை'ச்சிறிதுசிரமத்துடன் எடுத்துப் பரபரவென்று பிரித்துப் படிக்கத்தொடங்கின......

ஏதோ ஒரு பட்டிக்காட்டில் ஒரு குடிசையில் பிறந்த ஒரு பெண்! 'எனக்கு அப்பாவே இல்லையா அம்மா!' என்று அவள் அம்மாவைக் கேட்டு வற்புறுத்தி அழுதபோது அம்மா சொன்ன அந்தப்பதில்! "உனக்கு அப்பா உண்டு. கண்ணே! எனக்குத்தான் புருஷனே இல்லை! உலகம் உண்டாக்கித் தரவில்லை"—புரியாது என்பதால் சொல்லப்பட்ட பதிலை காலம் அவளுக்குப் புரியவைத்தது! தனக்கு அப்பா இருந்திருக்க வேண்டும் என்பதற்குத் தானும், அம்மா இருந்தாள் என்பதற்கு நினைவுமே அவளுக்கு ஆதாரங்களாயின! மணல்வீடு கட்டிக் கூட்டாஞ்சோறு சமைத்துக் கூடிக் குதித்து விளையாட வேண்டிய பருவம் அவளை நிஜ வீடுகளிலேயே நுழைத்து உண்மை அடுப்பருகில் உட்கார வைத்தது; கண்களைக் கருக்கிக் கசக்கியது! பவுடர் டப்பாவைக் கொடுத்துப் பளபளப்பான கண்ணாடியின் எதிரே நிற்கவைத்துக் கன்னத்தைக் கண்ணாடியாக்குவதற்குப் பதிலாக, சதா சாம்பலும் சாமான்களுமே அவள் கையில் குடியேற வைத்தது!...

பொருளின் மதிப்பு வளர்ந்து பெருகியதும் அதைச் சுற்றிப் பாதுகாப்பும் கவனமும் பெருகி வளர்கிறதல்லவா? அவள் உடலின் கவர்ச்சியில் வளர்ந்து மலர்ந்து உயர்ந்த மதிப்பைச் சுற்றிப் பாதுகாக்க, நீளமும் அகலமும் குறைந்த தாவணியால் முடியாததால் அந்த இரண்டும் பெரிதான சேலை அதன் இடத்தைக் கைப்பற்றிப் பெருமையடைந்தது! அவளைப் பார்த்து முன்பு சிரிப்பதற்காகவே சிரித்தவர்கள் இப்போது சிந்தித்துச் சிரித்துச் சிந்தித்தார்கள்! வண்ணாத்திப் பூச்சியாக முன்பு அவள்மீது படிந்து பறந்த பார்வைகள் இப்போது அட்டையாகப் பாய்ந்து ஒட்டிக் கொண்டன! முன்பு அவளைப் பார்த்தவர்களின் மனக் குளத்தில் அலைகள் மட்டுமே எழுந்து அடங்கும்; இப்போதோ அந்த அலைகள் குளத்தையே அசைத்துக் கரையை மோதி உடைத்து வாய்க்காலாக வழிந்து ஆறாகப் பெருகி ஓடத் தொடங்கின!... அவளுக்குச் சிறு வயதிலிருந்தே அதிக ஆதரவு கொடுத்துவந்த அந்தக் கிராமத்து நாட்டாண்மைப் பெருந்தனக்காரர் அவளுக்குத் திரு

மண ஏற்பாடுகளைத் துவக்கினர். தனக்கு அடங்கிய ஒரு வேலைக்காரனிடம் அவளைத் தாரமாக்க நிச்சயம் ஆயிற்று. திருமணமும் நடந்து முடிந்தது. அப்பாவாக இருந்து நன்மைகள் செய்த அவர் ஒருநாள் தன்னை அத்தாளுக ஏற்றுக் கொள்ளும்படி அவளிடம் தனியே சொல்லி, வேண்டி, கெஞ்சி, கட்டளையிட்டுப் படையெடுத்தார். ஆபத்தை அடித்துவிரட்ட அவளும் அவனும் மிரண்டு அங்கிருந்து நகரத்திற்கு ஓடி அதன் பார்வையிலிருந்து மறைந்தார்கள்...

வேளைக்கு வேளை, வேலைக்கு வேலை இருவருமே சேர்ந்து மாறினர்கள். எல்லாம் கூலி வேலைதான். எண்ணம் என்ன வேலை என்பதைப் பேசவில்லை. பேச்சு, எவ்வளவு கூலி என்பதைத்தான் எண்ணியது. வேண்டாமல் வந்த பிறப்பும், தீண்ட முடியாத இறப்பும், தீண்டி வருத்தாமல் விடாத பசியும் அவர்களை, உயிரை உடலோடு ஒட்டிக் காத்து வரும்படி உத்தரவிட்டன. எண்ணுமல் பிறப்பிக்கும் பெற்றோருக்கும் எண்ணி வாழப்போகிற தனக்கும், எண்ணத்தை எரிச்சலாக்கும் இந்தச் சமூகத்துக்கும் தொல்லையாக இதற்கிடையில் ஒரு பிள்ளை வந்து உதித்தது. அவர்கள் நிலைமை படுமோசமாகியது. பட்டினி சில நாட்களில் அவர்கள் வயிற்றில் நல்ல விருந்தைக் கண்டது. ஒருநாள் அவளுடைய கணவன் வேலை தேடிப் போனவன் பிறகு வீட்டைத் தேடி வரவே இல்லை. பிள்ளையுங் கையுமாக அவள் அவன் இருக்குமிடத்தைத் தேடி அவன் இல்லாத இடமெல்லாம் ஓடி உள்ளம் ஓடிந்தாள். தள்ளாடித் தனியே சாலையில் வரும்போது துளியும் தயங்கித் தடுமாருமல் அவள்மீது மோதிய மோட்டார் — அது தாய்க்குச் சிறிது காயத்தை மட்டுமே உண்டாக்கிவிட்டுக் குழந்தையைச் சக்கரத்தில் அறைத்துப் பிணமாக்கியது! திக்கற்ற அவளைக் கவனிக்க, தெய்வம் ஒருவனைத் தற்செயலாக அந்தப் பக்கம் போக வைத்திருக்கிறது! திடுக்கிட்டு நின்ற அவன் மோட்டாரின் உள்ளே இருந்த சீமானை அவளுக்காகத் திட்டி, போலீஸைக் கூவி சீறும் புலியானன். சீமான் அவன் கையில் தன் பையிலிருந்து ஒரு கட்டு 'நோட்டு'களை எடுத்துத் திணித்து, சீறும் புலியாகி இருந்த அவனைச் சிரசை ஓட்டுக்குள் அடக்கிய ஆமையாக்கிச் சிரித்துவிட்டு, காரைக் கற்பனையாக்கி ஓட்டிக்கொண்டு மறைந்தான். கட்டு நோட்டுகள் கையில் வந்த பிறகும் உதவிக்கு வந்தவன் கருத்தில் கருணையிருந்ததும் கண்ணில் சகோதர வாஞ்சை இருந்ததும் அவன் பேச்சில் தெரிந்ததுதான் அவள் எண்ணத்தை ஆச்சரியமாக்கியது. அந்தக் காருண்யவானுடன் சுடுகாடு நோக்கி அவள் நடந்தாள். போகும் வழியில் அவன் இறுதிச் சடங்குக்கு வேண்டிய சாமான் வாங்கிவரப் போனன். வீணுகக் கழிந்து கொண்டிருந்த

நேரம் அவனைத் திரும்பி எதிர் பார்ப்பது வீண் என்று, அவனுக்காகக் காத்திருந்த அவளுக்கு விளக்கி உணர்த்தியது. அப்போதுதான் கான்சி நோட்டு அவன் கையிலேயே தங்கிவிட்டது என்பதை நினைவு சொல்லியது. அதே நினைவுதான், தான் முன்பே பணத்தை அவனிடமிருந்து வாங்கி வைத்துக் கொள்ளும் நினைவை உண்டாக்கவில்லையே என்று நினைத்தது. கஷ்டம் என்பது என்ன? கற்பனையைக் கிளப்பி தன்னையே அழிக்கும் உணர்ச்சியை வளர்த்து வாழ வைக்கும் எண்ணம்தானே! அந்த எண்ணமே தோன்றாதபடி, இந்த மூன்று நாட்களாக, உணர்ச்சிகளின் அன்னையாகிய பசி, அன்னையாகி அனாதையாகிய அவளைச் சின்னாபின்னப்படுத்தியிருக்கிறது. முடிவில் ஒரு பங்களா சுற்றுச் சுவரின் திறந்த கதவு அந்த இரவில் அவளை உள்ளே இழுத்து வந்து, உணவுக்காகத் தன் குரல் முரசை ஓங்கி ஓங்கிக் கொட்டி முழக்கியிருக்கிறது. அதற்குப் பிறகு நடந்தது தான்...

—சொல்லும்போது இடையிடையே குறுக்கிட்ட அழுகையை அவள் அடிக்கடி தடைப்படுத்தி வைத்ததால், சொல்லி முடித்ததும் தங்கிச் சேர்ந்திருந்த அழுகையெல்லாம் பொங்கி வழிந்தது. சர்க்கஸ் பார்க்கக் கூடாரத்தில் உட்காரப் போய் அங்கு விநோதங்கள் புரிய வந்த வன விலங்குகள் கம்பிகளைத் தள்ளி விலக்கி நாலு பக்கமும் துள்ளிக் குதித்து உறுமினால் — அந்நிலையில் ஏற்படும் உணர்ச்சிகளே என் எண்ணங்களில் எங்கும் உருவெடுத்தன!

கண்ணுக்கு எதிரே அழுகிற அவளும்,

எண்ணத்தால் அழுகிற நானும்!

இருவரும் பெண்களே!

ஆனால்,

அவள் வாழ்வுத் தோட்டத்தில், நியாயமாகப் பூத்துக் குலுங்கவேண்டிய மல்லிகைக் கொடிகளெல்லாம் கள்ளிச் செடிகளாகி மண்டிவிட்டன!

எனக்கோ, கற்பனைக் காட்டில் பயந்து பறந்துகொண்டிருந்த மின்மினிகளெல்லாம் கண்ணுக்கு வெளியே வானப் பூங்காவில் நின்று நகைக்கும் நட்சத்திரங்களாகி நிறைந்துவிட்டன!

மீட்டப்படும் என் வாழ்விலோ 'புஸ்' என்று படமெடுக்கும் பாம்பையும் ஆட்டி உருக்கும் புன்னாகவராளி கிளம்புகிறது! அவள் வாழ்விலோ, பழுத்த தத்துவவாதியையும் பாம்பாகப் படமெடுக்க வைக்கும் இரைச்சலே கிளம்பி நிறைகிறது. பேதத் திமிர் பிடித்த இந்தச் சமுதாயம்...

'பூமியின் மேற் பரப்பில் முக்கால் பங்கு நீர்; கால் பங்கு நிலம்!'—கேசி படித்த வாக்கியத்தை என் நினைவு திரும்பச் சொல்லிப் பார்த்தது!

எப்போதோ ஒரு நாள்—எதிர் பாராத வேலை—ஏதோ சிறிது நேரம் தாமதம் அவர் திரும்பி வர—அதனால்—பெருகவேண்டிய

இன்பம் தடைப்பட்டு அடைபட்டுக் கிடக்கிறது என்பதால், எண்ணத்தால் இதயம் உருகிக்கொண்டிருக்கிறேன் நான்! இனி எப்போதாவது ஒருநாள்—எப்படியாவது சிறிது நேரம் — துன்பம் சிதற எதிர்பார்க்கவே முடியாத நிலை — இதனால் துயரத்தால் கசக்கப்பட்டுத் தாங்க முடியாமல் கதறிக் கண்ணீர் வடித்துக் கொண்டிருக்கிறாள் அவள்!

பிணம் கிடக்கும் வீட்டில் துக்கம் விசாரிக்கச் செல்லும்போது அலங்காரம் முழுதும் செய்துகொண்டு உள்ளே நுழைந்து விட்டதுபோன்ற அவமானம் என் உள்ளத்தை அரித்துத் தின்னத் தொடங்கியது!......உள்ளேபோய்ச் சில நிமிஷங்களில் திரும்பிவந்து அவள் கையில் நான் வைத்த புதுப் புடவையையும் சில ரூபாய் நாணயங்களையும் அவள் கைகள் நீட்டி வாங்கிக் கொண்டன. அவள் அழுகை திடீரென நின்று செருமலாகியது! ஆச்சரியத்தால்தான் இது அவளுக்கு நேர்ந்தது என்று என் நினைவு பேசியது. அது பேசி முடிப்பதற்குள் ஒலியைக் காற்றில் கரைத்துக்கொண்டு, ஒளியை வெளியில் பரப்பிக்கொண்டு ஓடி வந்த எங்கள் காரின் உருவம் பங்களாவை நெருங்குவது கண்டு படபடவென்று என் மனம் அடித்துக்கொண்டது. திறக்கப்பட்ட காரிலிருந்து இறங்கிவந்த அவரின் உடையும் நடையும் — அதைப் புதிதாகக் கண்ட பிச்சைக்காரி மட்டுமல்ல, பழக்கப்பட்ட நானுமே பயந்து விட்டேன். திடீரென நின்று அவளையும் என்னையும் பார்த்துவிட்டு அவர் சொன்ன அந்த வாக்கியம்......

"நிரஞ்சனா! உன்னுடைய முட்டாள் தனமும் பைத்தியக்காரத்தனமும் பிச்சைக்காரியின் கையில் அதிர்ஷ்டமாக உருவெடுத்துச் சிரிக்கிறது!" அலட்சியமான சிரிப்புடன் இதைச் சொல்லிவிட்டு உள்ளே போய் மறைந்த அவர் உருவத்தோடு கூடவே என் கண்களும் போய்த் திரும்பின. ஆச்சரியம்! நின்றுகொண்டிருந்த பிச்சைக்காரப் பெண்ணைக் காணவில்லை! இனி ஒரு நிமிஷமாவது தாமதித்தால் தனக்கு வந்த அதிர்ஷ்டம் பறிபோய்விடும் என்ற நினைப்பால்தான் அவள் ஓடிவிட்டாள்! வேலைக்காரி உள்ளே போய் மறைந்துவிட்டாள். என் உடல் சிலையாகநின்றுவிட்டது. உள்ளமோ! கதறக் கதற யாரோ அதைக் கொலை செய்துகொண்டிருக்கிறார்கள்—யாரோ என்ன? அவரின் அந்த வாக்கியம்தான்! அப்படியே விடு விடு என்று மாடிக்கு ஓடி கேசியைத் தூக்கித் தோளில் போட்டுக்கொண்டு, பங்களாவை விட்டு நடந்து அடுத்த ரயிலில் ஏறி ஊருக்குப் புறப்பட்டுவிட்டால் என்ன? எண்ணினேன்! எண்ணினேன்! எவ்வளவோ ஏழைகளின் வழக்கில் தானாகவே போய் 'வக்கீல் கட்டணம்' ஏதும் வாங்காமல் வெற்றி வாங்கித் தந்த அவர் உள்ளத்திலிருந்தா இந்த வாக்கியம் வெளிவந்தது? கொடையாளி—குற்றவாளி மட்டுமல்ல, கோமாளியுங்கூட! தீர்ப்புக் கூறி விட்டார். கவிழ்ந்து விழுந்த முகத்தை உயர்ந்து விரிந்து தாங்கி நிறுத்திய கைகளுக்குக் கண்கள் கண்ணீரைப் பரிசாகத் தந்தன! அவர் உள்ளேயிருந்து திரும்பியது எனக்குத் தெரியவில்லை. என் தோள்களை அவர் தன் இரண்டு கைகளாலும் பிடித்துக் குலுக்கிக்கொண்டே உயர்ந்த இரங்கிய குரலில் ஆறுதல் சொல்லிக்கொண்டிருந்தார். அவர் பாதங்களை என் கண்கள் நான் நின்ற இடத்திலிருந்தே கழுவின.



"கடைசியில் கிழிந்துவிடும் சில கஜம் புதுத் துணி! செலவாகிவிடும் சில ரூபாய்!—இதை இழப்பதால் பிரபுவாகிய உங்கள் குடி ஒன்றும் முழுகிப் போய் விடாதே!" என் அழுகை நின்று விட்டது. ஆத்திரம் பேசியது.

"உன் குடி முழுகிப் போய் விடாது நிரஞ்சனா! முழுகிய

அவள் குடி அதனால் கரையேறி விடவா போகிறது?"

"ஏழைக்கு இரங்குவதால் கௌரவம் வந்து சேரும்!"

"கௌரவத்தை எண்ணியா நீ அவளுக்குத் துணியும் பணமும் கொடுத்தாய்?"

"அவள் கதையைக் கேட்டு நெஞ்சில் இரக்கமும் கண்ணில் நீரும் வழிந்தன. அதனால்தான்."

"உன் நெஞ்சில் இரக்கத்தையும் கண்ணில் நீரையும் பலர் வரவழைக்கிறார்கள். அப்போது என்ன செய்வாய்?"

"எண்ணிப் பார்க்காமல் எடுத்துக் கொடுப்பேன்!"

"பங்களா! தோட்டம்! நிலம்! கார்!...எல்லாவற்றையுமே பணமாக்கி எல்லோருக்கும் எடுத்துக் கொடுப்பதாகவே வைத்துக் கொள்! முடிவு?"

"முடிவா?"

அழுதிருந்தேன் என்ற எண்ணமே மறைந்து போய்விட்டது. ஆச்சரியம் இந்த வினாவாகியிருந்தது. அவர் சொன்னார்.

"முடிவு என்ன ஆகும்! கண்ணீரையும் இரக்கத்தையும் வரவழைக்கும் புதுக் கதை ஒன்று உண்டாகும். புதுப் புடவையும் பணமும் கொடுக்க நிரஞ்சனாவுக்கு எந்த நிரஞ்சனாவும் உலகத்தில் தேடினாலும் கிடைக்கமாட்டாள்!"

—சொல்லி முடித்து, என்னைப் பார்த்து முடித்துவிட்டு அவர் வெளியைப் பார்க்கத் தொடங்கி அப்படியே நிலைத்து நின்றுகொண்டிருந்தார். நான் வானத்தைப் பார்த்தேன். வெட்டிய பூசனிக் கீற்று, யாரோ உயரே எட்டிவிட்டெறிந்து நின்றதுபோல் வானத்தின் நடுவில் வந்திருந்த சந்திரன் காணப்பட்டான்! என் சிந்தனையில் வளர்ந்திருந்த பாதி நிலாவைப் பௌர்ணமி நிலாவாக்க நான் அவரைப் பார்த்துக் கேட்டேன்.

"துன்பக் கதைகள் யாரும் எழுதாமலே வைக்க என்ன செய்வது?"—

கேட்ட என்னைப் பார்த்து அவர் புன்னகை புரிந்தார்; சொன்னார்.

"துன்பக்கதை! உன்னதமான அந்தக் கதையைப் படித்தால் பொழுது இன்பக் கதையாகும்—அறிவு நிலத்தில் புதிய விதை ஊன்றும்! நிரஞ்சனா! கதை எழுதப்பட்டால் அதைப் படித்து ரசிப்பதா இல்லை—அதைப்போல் எழுதி வைக்கவிடக் கூடாது—அதற்கு என்ன பண்ணுவது என்று கேட்பதா? நல்ல ரசிக மணியம்மா நீ!" சொல்லி விட்டுச் சிரித்தார். நான் சிரித்தேன்—அவர் சிரித்ததற்கு அல்ல—அப்போது என் நினைவில் உருவம் பெற்றதை எண்ணி—

'அறிவு கைவிடும்போது, புத்திசாலிகள் நகைச்சுவையிடம் அடைக்கலம் புகுவார்கள்!'...

என் முதுகுப்புறமாக ஒளிந்து வந்து என் தோளை அடைந்த அவர் கை என்னிடம் உள்ளே நடக்கும்படி இரகசியம் பேசி அதன்படி செய்யவும் வைத்தது!......

இரவை அடித்து விரட்டியதால் கிழக்கு வானம் மகிழ்ந்து

சிவந்ததை வெகுநேரம் பார்த்து நினைவில் வைத்துக் கொண்டிருந்த மேற்கு வானம் பகலை அடித்து விரட்டியதால் சிரித்துச் சிவந்தது! ஊரில் சுற்றி வளைத்துக் கடற்கரையை நோக்கி டிரைவர் காரை ஓட்டிக்கொண்டிருந்தான். உள்ளே பின் சீட்டில் உட்கார்ந்திருந்த எங்கள் பேச்சு ஒன்றை நோக்கியே பல விதமாகச் சுற்றி வளைந்தது! எங்களுடைய ஒரு பக்கத்துத் தோள்கள் நெருங்கிச் சேர்ந்திருக்கக் கூடியதை நடுவில் உட்கார்ந்திருந்த கேசி பிரித்து வைத்தாள்!

"நிரஞ்சனு! கேசி ஏன் நமக்கு நடுவில் உட்கார்ந்திருக்கிறுள் தெரியுமா?"— அவர் கேட்டார். நான் பதிலை எண்ணுவதற்குள், கேசியே பேசினுள்.

"தெரியுமே அப்பா! என் இடம் இது. யாருக்கும் இதை விடமாட்டேன்!"

"ஆமாம் நிரஞ்சனு! அவள் இடம் இது. தான் வந்தது போதும். தன்னைப்போல் போட்டிக்கு இன்னொருவர் முளைத்து விட எண்ணத்தைக் கூட நம்மிடம் உண்டாக்கக் கூடாது என்பதால்தான் நம்மைக் கேசி பிரித்திருக்கிறுள்!"

அவர் பேச்சால் டிரைவர் சிரிப்பது கன்னத்தின் வழியே தெரிந்தது. அப்போதுதான் அவர் பேச்சு எனக்குப் புரிந்தது! வெட்கத்தால் திடுக்கிட்டேன். கண்களால் கோபத்தைக் காட்டி டிரைவர் அங்கே இருப்பதைச் சுட்டி, நான்கு விரல்களால் என் வாயைப் பொத்தி அவரை அப்படி இருக்கும்படி கெஞ்சியும் கண்டித்தும் வேண்டுகோளையும் கட்டளையையும் கலந்து அவரிடம் விட்டேன்!...

எதிர்ப்பக்கம் எண்ணத்தின் வேகத்தில் பறந்துவந்த லாரி திடீரென அடக்கி நிறுத்தப்பட்டது. ஒரே அலறல்! சக்கரத்தின் கீழே ஒருவன் விழுந்து கைகளையும் கால்களையும் விரித்துக் கொண்டு கிடந்தான். திடீரென எங்கள் காரும் அந்த இடம் வந்ததும் சக்கரத்தின் டயர் தேயும் சத்தத்துடன் நின்றது. கூட்டம் கூடிவிட்டது. கேசியைப் பிடித்துக் கொண்டு வெளியே அந்தக் காட்சியைப் பார்த்துக்கொண்டு நான் நின்றுவிட்டேன்.

'பூமியின் மேற்பரப்பில் முக்கால் பங்கு நீர்; கால் பங்கு நிலம்!'— கேசி படித்த அந்த வாக்கியத்தை நினைவு மீண்டும் எழுதியது. அவர் வக்கீல் மட்டுமல்ல, டாக்டர் வேலையும் தனக்குத் தெரியும் என்பதைக் காட்டிக் கொள்ளும்படி நடந்துகொண்டார். கூட்டத்தை விலக்கினுர்; எங்கள் டிரைவரைக் காப்பி வாங்கி வரும்படி உத்தரவிட்டார்; தன் சில்க் கைக்குட்டையால் அடிபட்டவனின் காலில் இருந்த இரத்தத்தைத் துடைத்தார்; அது சரியாகத் துடைக்கவில்லை—மீண்டும் அவசரத்தில் துடைத்தார்; கேசி கழுத்தைச் சுற்றி நூதனமாகப் போட்டிருந்த கலர் டவலை இழுத்துக் கிழித்து வழியும்

இரத்த ஓட்டம் தடைப்படும் படி காலில் இறுகக் கட்டுப் போட்டார்...

லாரியில் சுமையைத் தூக்கி வரும் டிரைவர் அவ்வளவு சுமையும் தன் மனதில் புகுந்து தாக்கியதால் அப்படியே மலைத்து மயங்கி நின்று விட்டான்!

துன்பக் காட்சியைப் பார்க்கப் போய்—கேசி, அவர்,—நான்—மூவரும் கூட்டத்தில் பலருக்கு இன்பக் காட்சியை உண்டாக்கிக் கொண்டிருந்தோம்.

"வக்கீல் நீலவர்ணம் அவர் தானப்பா! இது தெரியாதுங்கறியே! என்ன பட்டணத்து ஆளப்பா நீ! ஒசரத்திலே இருக்கிற ஜட்ஜெல்லாமே — இவர் கோர்ட்டிலே வாயைத் திறந்தால் ஒடுங்கி அடங்கிக் கேப்பாங்க அப்பா!"

— சிலர் முணுமுணுப்புச் சேர்த்த இரைச்சல் எனக்கு இசையாக இருந்தது!

யந்திரங்கள் வந்ததால் உண்டான அபாயத்தை ஆத்திரத்தோடு நின்று விளக்கிக்கொண்டிருந்த ஒருவர், நகர்ந்து வந்த டிராம் வண்டியில் ஏறி விரைவாகப் போய்ச் சேர ஓட்டமாக ஓடினார்!

"முன் ஜன்ம பலன்! கர்ம வினை! இப்படி அனுபவிக்க வேண்டி வந்துடுச்சு!"—என்று விபத்தின் காரணத்தைக் கண்டு பிடித்துச் சொன்ன ஒருவர்—கர்ம வினையை அனுபவிக்கச் செய்யக் கடவுளுக்குக் கருவியாக இருந்த லாரி டிரைவரைப் 'பாக்யவான்' என்று பாராட்டாமல், அவனுடைய அஜாக்ரதையைச் சொல்லிக் கண்டபடி திட்டினார்!

"ஆள் மேலே லாரியை ஏத்தின டிரைவரைப் பிடிச்சு ஜெயிலிலே போடனும் அம்மா!'—கேசியின் இரக்கம் லாரி டிரைவர் விஷயத்தில் அவள் நெஞ்சைக் கல்லாக்கியது!

"பலர் நடக்கவும், சிலர் காரில் போவதாலும்தான் இந்த அபாயம்! எல்லாருமே காரில் போனால் ஏது இந்த விபத்து?"—அலட்சியமாக ஒருவர் சொல்லிக் கொண்டு அங்கிருந்து நடந்தே போனார்.

பக்கத்து சௌகார் கடையிலிருந்து போன் செய்துவிட்டு அவர் திரும்பினார்!...சில கணங்களில் சர்க்கார் மருத்துவ விடுதி மோட்டார், பந்தய ஓட்டக்காரனின் உணர்வில் பறந்து ஓடி வந்தது! அவர் வேலை முடிந்து தீர்ந்தது...

கடற்கரை மணலில் சரிவான இடத்தில் தண்ணீர் மேலே தெறிக்காத இடத்தில் நாங்கள் உட்கார்ந்திருந்தோம். இரத்தக் கறை படிந்திருந்த சில்க் சட்டையைக் கழற்றிச் சுருட்டிப் பக்கத்தில் வைத்தார்; தென்றலின் சுகத்தைச் சட்டை போட்டிருக்கும் மற்றவர்கள் அநுபவிக்க

மக்கள் பெருக்கத்தின் அபாயத்தை தடுக்க
கர்ப்பதடைத்து
விஞ்சானமுறைப்படி தயாரிக்கப்பட்ட
மிருதுவான அமெரிக்கன் கருவிகள்
ஆண், பெண், கையாள்வது
செட்டு விலை ரூ 3-0-0 தபால்செலவு 0-8-0
MULLER & Co. (31, BEAT) G.T. MADRAS.1.

முடியாத தன்மையைச் சொல்லிச் சிரித்தார்.

கேசி அலைகளைப் பார்த்துக் கொண்டு மௌனமாக இருந்தாள். நான் அதைப் பார்த்துக் கொண்டே மௌனமாக இருந்தேன். அவர் இதைப் பார்த்துக் கொண்டே மௌனமாக இருந்தார்.

எதிரே குன்றைப் போல உயர்ந்து மணல் குன்றைப் போல் சரிந்து கரைந்து மறைந்து கொண்டிருந்த அலைகள் என் நினைவலைகளைக் கட்டிக் கலந்தன. கண்ணுக்குத் தெரியாத எதிர் கரைக்கும் நாங்கள் அமர்ந்துள்ள இக்கரைக்கும் இடையில் உள்ள கடல்! இரு கரைகள்...ஒன்று ஏழையின் வாழ்வு! இன்னொன்று இன்பம்! பிரிந்த கரைகள் சொரிந்த கண்ணீரின் அணைந்து இணைந்த சங்கமம்தான் விரிந்து பரந்த கடல்! சடார் சடாரென்று என் நினைவுத் திரையில் சித்திரங்கள் தோன்றி மறைந்தன. அன்று இரவு வந்த பிச்சைக்காரப் பெண்! அவளுக்கு நான் கொடுத்த வெகுமதி! அதற்கு அவர் கொடுத்த புத்திமதி!... இந்தப் படம் மறைந்த இடத்தில்...வரும் வழியில் லாரியில் மோதி உருண்ட மனிதன்! அவனுக்கு ஓடிப் போய் உதவி பலவும் செய்த அவர்!—இந்தப் படம் தோன்றியது! திடீரென்று அவரைத் திடுக்கிட வைக்கலாம் என்று கேட்டேன்.

“என்னுடைய உதவி புடவையாக—பணமாக—சோறாக இருந்தது! உங்கள் உதவியின் உருவம்—சில்க் கைக்குட்டையாக—கிழிந்த டவலாக—காப்பியாக—வீணாகிவிட்ட இரத்தக் கறை படிந்த இருபது ரூபாய்க்கும் உயர்ந்த சில்க் சட்டையாக இருந்தது. உங்களுடைய உதவியின் பண உருவம் என்னுடையதை விட மிகப் பெரியது! நீங்கள் எனக்கு நிரஞ்சனாவாக இருந்திருந்தால்—‘உன்னுடைய முட்டாள்தனமும் பைத்தியக்காரத்தனமும்தான் அந்த உதவியின் உருவெடுத்துச் சிரிக்கிறது’ என்று சொல்லியிருக்கமாட்டேன்!’

கேசியை விட ஆவலாக அவர் என் முகத்தைப் பார்த்துக் கொண்டிருந்தார். பழி தீர்த்து

புதிய காவியம் -
கொடி முல்லை
வாணிதாசன் எழுதியுள்ள
அற்புதமான காதல் ஓவியம்!
தெளிந்த கருத்துக்கள்!
எளிய நடையில்!
விலை அணா 12
பொன்னி .... சென்னை-21.

வீடும் விளக்கும்
சுகி எழுதியது
வாழ்க்கையின் இன்ப துன்பங்கள் சுவைபடச் சித்தரிக்கப்பட்டுள்ளன.
இரு நிற அட்டை. 66 பக்கங்கள்.
விலை அணா 8
பொன்னி — சென்னை-21.

கொண்ட திருப்தி என் மனதில் எங்கும் பரவி நிறைந்தது. அவர் சிரித்தார்! "என் கண்ணுக்கு எதிரே அது நடந்திருக்கும் போது என்னால் அதைச் செய்யாமல் இருக்க முடியாது!" என்று அவர் வாய் சொல்லி முடித்தது.

"என் கண்ணுக்கு எதிரே அது நடந்திருக்கும்போது என்னால் அதைச் செய்யாமல் இருக்க முடியவில்லையே!"-நான் சொல்லி முடித்தேன். எங்கள் இருவருடன் கேசியும் சிரித்தாள்.

எங்களை நோக்கி வந்து எதிரே நின்ற ஆளைக் கண்டு எழுந்தோம். முகத்தை உற்றுப் பார்த்ததும அந்த ஆளை உட்காரும்படி சொல்லிக்கொண்டே அவர் உட்கார்ந்தார். அந்த ஆள் உட்கார்ந்துகொண்டே ஏதோ சொல்லிக்கொண்டிருந்தார். நான் இதைப் பார்த்துக்கொண்டே கேட்டுக்கொண்டு உட்கார்ந்தேன்.

"ஆலை மூடி ஆறு நாளைக்கு மேலே ஆயிடுச்சே! சாலையிலே எல்லாம் தொழிலாளிங்க பட்டினியால் சாய்ந்து கிடக்காங்க. மாலையிலேருந்து ராத்திரி நெடுநேரம் வரைக்கும் வீட்டுக்குக் கூடத் திரும்பாமே முதலாளிகிட்டே பேசிப் பார்த்திங்களே! அந்த முடிவைக் கேட்டு ஒரு முடிவுக்கு வரலாமின்னுதான் இங்கேயே உங்களைத் தேடி வந்துட்டேன்!"

அமைதியாக அவர் சொன்னார்.

"காலையிலே பட்டினிப் பட்டாளம் ஊர்வலம், கலெக்டர் பங்களாவை நோக்கி! அமைதியான ஊர்வலம்! ஊரைச்சுற்றி அதை நடத்தி வைக்கப்போவது நீயும் நானும்தான்! நீ போய் அதற்கு நடக்க வேண்டியதைக் கவனி போ!"

கொஞ்சம் கரன்சி நோட்டுகளை வாங்கிக்கொண்டு வந்த ஆள் நடந்து மறைந்தார். ஆச்சரியமும் சிறிது அச்சமும் என்னைத் திடுக்கிட வைத்தன! என் கண்களைப் பார்த்துக்கொண்டே அவர் சிரித்தார்; சொன்னார்.

"நிரஞ்சனா! துன்பக் கதைகள் எழுதவைக்காமல் இருக்க வழி கேட்டாயல்லவா அன்று!

அப்படிச் செய்ய ஆரம்ப ஏற்பாடுகளில் ஒன்றுதான் இது!''

கேசி, தான் படிக்கப் போக வேண்டுமென்று எங்களைக் கிளப்பினள்.

“பூமியின் மேற்பரப்பில் முக்கால் பங்கு நீர்; கால் பங்கு நிலம்!''— பாடத்தைச் சொல்லிப் பார்க்கவே ஆரம்பித்து விட்டாள்!

“கண்ணீர் உள்ள இடத்தில் ஒரே இரைச்சல் இருக்கும். அதோ பார்!''— கடல் நீரைக் காட்டிக்கொண்டே அவர் என்னிடம் சொன்னர்.

உருண்டு சுருண்டு புரண்டு கொண்டிருந்த அலைகள் ஒரேயடியாக இரைச்சலிட்டுக் கொண்டிருந்தன!

“சிரிப்பு உள்ள இடத்தில் ஒரே பாட்டு இருக்கும். அங்கே பார்!''— நீட்டி நின்ற அவர் கையின் சுட்டுவிரல் கடற்கரையில் தூரத்தில் இருந்த கூட்டத்தைக் காட்டிக் கொண்டிருந்தது. நேராக வளர்ந்து மூன்றே கிளைகள் மட்டும் விட்டு இலைகள் இல்லாமல் நின்றுகொண்டிருந்த — அந்த ‘மூன்று ஒலி பெருக்கிகள்’ இசையைத் திசையின் ஒவ்வொரு திக்கிலும் பரப்பிக் கொண்டிருந்தன...

‘என்ன ஆனந்தம் இதிலே! இந்நாள் வரை அனுபவித்தறியோம்!’— அந்த இசை தெளிவாகக் கேட்டது!

மோட்டாரை நோக்கி நாங்கள் மூவரும் போய்க் கொண்டிருந்தபோது அவர் வாய் பேசிக்கொண்டே இருந்தது.

“இரைச்சலை இசையாக்க வேண்டியிருக்கிறது! நிரஞ்சன! நீ பயப்பட மாட்டாய் என்றே நினைக்கிறேன். ‘கத்தலைக்’ கானமாக்கும்போது அடுத்த வீட்டுக்காரர்கள் கற்களை வீசியல்ல, அவைகளை விடக் கடுமையான சொற்களை வீசிப் பார்ப்பார்கள். ஆனல், இரைச்சலை இசையாக்கி உலகத்தின் இதயம் உருகும்படி ஆக்கிவிட்டால், கல் துண்டுகளை வீசி அலுத்தவர்களே கற்கண்டுகளையும் கனத்த பூச்செண்டுகளையும் தூக்கிக்கொண்டு, நம்மைப் பார்க்க நம்மிடம் ஓடி வருவார்கள். அப்படி நடக்கும்போது, முதலில் அவர்கள் முட்டாள்கள் — கடைசியில் பைத்தியக்காரர்கள். இவர்களைப்பற்றி நமக்குக் கவலையில்லை!''

டிரைவர் காரைக் கிளப்பினன்.

என் மனதில் ஒரே இரைச்சல்.

கார் நகர்ந்து ஓடியது. டிரைவர் ஹாரனை விட்டு விட்டு அழுத்தினன். என் மனதில் இருந்த இரைச்சல் இசையாகிச் சுற்றிச் சுழன்றது!

1st Prize Winners of Competition No. 51. (1) P. Sivaraman, Travancore State. (2) S. I. Bhatnagar, Delhi. (3) Krishnakumr, Rajasthan. (4) Kshetrabasi Mohanty, Midnapur. (5) Jogeshwan prasad Bhagat, Dhanbed. (6) Padmasali K. V. Thimmappa, Kurnool. (7) S. Vaiyapuri, Tonjore Dt., (8) P. John Rathnam, Nellore. In addition 44 persons are awarded 3rd prize and 6 persons 5th prize.

Full particulars are published in the Rainbow dated 10—6—51

ரிஜிஸ்டர் நெ. 249 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 53

M/S Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப் பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின்பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்ரும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1000 அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEY S. NO 51 *67 to 82=298

67	78	74	79
80	73	77	68
81	72	76	69
70	75	71	82

We hereby certify that the above is the solution in original deposited with us by Rainbow Competitions No. 51 on 7-5-51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd

V Ramanathan

முடிவு தேதி 27-6-51 விடை 12-7-51

பிரவேசக் கட்டணம் : கூபன் 1-க்கு ரூ. 1-0-0 6 கூபன் கொண்ட ஸெட் 1-க்கு ரூ. 5-0-0

306

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:— 69 முதல் 84 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினுலும் 306 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும்.

விதிகள்:— தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானுலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தைக் கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதைக் கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறைப் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் அல்லது 4 அணு ஸ்டாம்பு அனுப்பினுல் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்பவேண்டிய விலாசம் :—

THE RAINBOW COMPETITIONS No. 53

306, (14) Mint Street, MADRAS-1

விடுதலை

புதுமைப்பித்தன்

"நீலா......நீலா......"

மாடியிலிருந்த நீலா, கூக்குரல் கேட்டு இறங்கி ஓடி வந்தாள். அந்தக் குரல் கருணாகரனுடையதென்று, அவளுக்குத் தெரியாதா, என்ன?

வீட்டு முற்றத்தில் மாடிப் படிக்குச் செல்லும் வழியில், கருணாகரன் நின்றுகொண்டிருந்தான். அவன் எதிரில் வந்து நின்றாள், நீலா.

"காலையிலேயே வருகிறேன் என்று சொல்லிவிட்டு...நடுப்பகலாகப் போகிறது! பதினொரு மணிக்கு வந்திருக்கிறீர்களே... இவ்வளவு நேரம் என்ன செய்தீர்கள்?..." கோபித்துக்கொண்டதைப் போன்ற பாவனையுடன் கேட்டாள், நீலா.

"கோபித்துக்கொள்ளாதே, நீலா......காலையில் வரவேண்டுமென்ற தீர்மானத்துடன்தான் இரவு படுத்தேன்...என்ன செய்வது? படுக்கையை விட்டு, நான், பத்து மணிக்கு மேல்தான் எழுந்திருக்க முடிந்தது..." என்றான் கருணாகரன்.

"இப்படி விடிய விடிய யாராவது தூங்குவார்களா?......" அவனைக் கேலி செய்வதுபோல், கையால் வாயைப் பொத்திக்கொண்டு லேசாகச் சிரித்தாள், அவள்.

"போகட்டும்...காப்பி கிடைக்குமா? கிடைக்காதா?..." என்று கேட்டான் அவன்.

"ஓ! தாராளமாகக் கிடைக்கும்...ஆனால், விடிய விடியத் தூங்கியதற்குத் தண்டனையாக, இன்று உங்களுக்குப் பால் இல்லாத காப்பி..." என்று நீலா, சொல்லிக்கொண்டே சமையலறையை நோக்கி நடந்தாள். கருணாகரனும் அவளைப் பின்தொடர்ந்தான்.

•

போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரலிங்கம் பிள்ளையின் ஒரே புதல்வி நீலா. இண்டர் வரையிலும் படித்தவள். நல்ல அழகி.

நீலா, ஏழு வயதுக் குழந்தையாய் இருக்கும்போதே, அவள் தாய் இறந்துவிட்டாள். மரணத் தறுவாயில் தன் மனைவிக்குக் கொடுத்த வாக்குப்படியே, சுந்தரலிங்கம் பிள்ளை மறுமணம் செய்துகொள்ளவில்லை. தாயற்ற குறை நீக்கிக் குழந்தை நீலாவை வளர்ப்பதில் தன் முழுக் கவனத்தையும் செலுத்தினார். குழந்தைக்கு அவரே தாயும் தந்தையுமானார்!

கால வெள்ளம், ஒன்று, இரண்டு என ஆண்டுகளை அடித்துச் சென்றது. குழந்தை நீலா விபரம் தெரிந்த பெண்ணாகிவிட்டாள். இண்டர் வரை படித்த அவள், என்ன காரணத்தாலோ மேற்கொண்டு தான் படிக்க விரும்பவில்லையெனத் தந்தையிடம் தெரிவித்துவிட்டாள்.

அவர் மறுக்கவா போகிறார்?

இனித் தகுந்த இடமாகப் பார்த்து நீலாவிற்குத் திருமணம் முடித்துவிட்டால், தன்னுடைய மிகப் பெரிய சுமை ஒன்று கழிந்துவிடுமென்பது அவர் எண்ணம்! ஆனால்—இந்தக் கல்யாண விஷயத்தில் கூட, அவள், தன் தந்தைக்குச் சிரமம் வைக்கவில்லை. தனக்கும் கருணாகரனுக்கும் ஏற்பட்ட காதலை, பக்குவமாக அவரிடம் சொல்லி, அவனையே மணந்துகொள்வதற்கு அவர் சம்மதத்தையும் பெற்றுவிட்டாள். தாயற்ற ஒரே மகளின் விருப்பத்திற்குத் தடையாக நிற்க, அவர் ஏன் விரும்பப் போகிறார்?

நீலாவின் அழகிற்கு, கருணாகரன் எவ்விதத்திலும் குறைந்தவனல்ல! கலாசாலைப் படிப்பை முடித்துவிட்டு, எவ்வித வேலைக்கும் போகாமல், விதவையான தன் தாயுடன், இருக்கும் கொஞ்ச நஞ்ச நிலபுலன்களை வைத்துக்கொண்டு கௌரவமாக வாழ்க்கை நடத்தி வந்தான்.

வரும் சித்திரையில் நீலாவின் திருமணத்தை முடித்துவிட உத்தேசித்திருந்தார் அவர். இன்னும் நாலைந்து மாதங் கழித்துத்தானே, அந்தச் சித்திரை பிறக்கப்போகிறது!...

அன்றொரு நாள்!...

போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரலிங்கம் பிள்ளை, தமது தனி அறையில் உட்கார்ந்து ஆபீஸ் தபால்களைப் படித்துக்கொண்டிருந்தார்.

தம் மேலதிகாரியிடமிருந்து வந்திருந்த ஒரு கடிதம்—அதையெடுத்துப் பிரித்துப் படித்தார்.

போலீஸ்
தலைமைக் காரியாலயம்
6—2—50

......உள்ளூரில் இருக்கும் கருணாகரன் என்ற மாஜி கலாசாலை மாணவன், தடை செய்யப்பட்ட கம்யூனிஸ்ட் பிரசுரங்களை மறைமுகமாக விநியோகம் செய்வதாகவும், தலைமறைவா யிருக்கும் கம்யூனிஸ்டுகளுடன் தொடர்பு கொண்டிருப்பதாகவும், இரகசியப் போலீசாரிடமிருந்து தகவல் கிடைத்திருக்கிறது. ஆகவே, மேற்படி நபரின் வீட்டைத் திடீரென்று சோதனையிட்டு, ஆட்சேபகரமான கம்யூனிஸ்ட் பிரசுரங்களைப் பறிமுதல் செய்வதுடன் மேற்படி நபரையும் கைது செய்யவேண்டியது...

....

எதிர்பாராத பெரியதோர் அதிர்ச்சியைத் தந்த அக்கடிதத்தைத் திரும்பத் திரும்பப் படித்தார் சுந்தரலிங்கம் பிள்ளை.

“தனக்கு மருமகனாகப் போகும் கருணாகரன்—தன் ஒரே மகளுக்குக் கணவனாகப்போகும் கருணாகரன்—தன் மகளின் காதலன் கருணாகரன்—அவன் வீட்டைத் தானே சோதனையிட வேண்டுமா? அவனை, தானே கைது செய்யவேண்டுமா?”—திசை தவறிப் புயலில் சிக்கிய படகைப் போல் அவர் மனம் நிலைகொள்ளாமல் தத்தளித்தது.

"ஒருவேளை கருணுகரன் அப்படியும் இருப்பானே?..." சந்தேகக் காற்றில் சாய்ந்தாடியது அவர் மனம்.

"அப்படியொன்றும் தெரியவில்லையே!" சஞ்சலப்பட்ட மனம் தனக்குத் தானே சமாதானத்தைத் தேடிக்கொண்டது.

எது எப்படியிருக்கிறதென்பதைப் பிறகு பார்த்துக்கொள்ளலாம். சட்டபூர்வமாக வந்திருக்கும் உத்திரவுப்படி நடக்க வேண்டும்!

கடமை!

அதை மீறி நடக்கும் திராணி அவருக்கில்லை!

●

கருணுகரன் திடுக்கிட்டான்!

போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரலிங்கம் பிள்ளை, இரு போலீஸ்காரர்களுடன் எதிர்பாராத விதத்தில் தன் வீட்டிற்கு விஜயம் செய்திருப்பது, அவனுக்கு வியப்பையும் திகைப்பையும் உண்டாக்கிற்று!

சம்பிரதாயப்படி வரவேற்ருன் அவன். இன்ஸ்பெக்டர், உத்தியோக முறையில் தன் வருகையின் நோக்கத்தை விளக்கினர்.

வீடு சோதனையிடப்பட்டது!

தடை செய்யப்பட்ட, கம்யூனிஸ்ட் பிரசுரங்கள்—ஆட்சேபகரமான துண்டுப் பிரசுரங்கள்—அவன் வீட்டிலிருந்து கைப்பற்றப்பட்டன.

கருணுகரன் கைது செய்யப்பட்டான்.

கலங்கிய உள்ளத்தோடு தன் கடமையைச் செய்து முடித்தார் இன்ஸ்பெக்டர் சுந்தரலிங்கம் பிள்ளை.

மனிதப் பண்புகளுக்குப் புறம்பற்ற முறையில், மிகவும் மரியாதையுடன் சிறையில் கருணுகரனை நடத்தவேண்டும் என்று போலீஸ்காரர்களிடம் எச்சரித்துவிட்டு வீடு திரும்பினுர் அவர்.

●

கருணுகரன் கைது செய்யப்பட்ட விஷயம், காட்டுத் தீப்போல் எங்கும் பரவி, சிறிது நேரத்திற்கெல்லாம் அச்செய்தி நீலாவின் காதுகளிலும் விழுந்தது.

அவள் துடித்தே விட்டாள். பழுக்கக் காய்ச்சிய இரும்புக் கம்பிகளை இருதயத்திற்குள் சொருகியது போன்ற வேதனை! நிலை கலங்கிய நெஞ்சுடன்—நீர் துளிர்க்கும் கண்களுடன்—தந்தையின் வரவை எதிர்நோக்கிக் கொண்டிருந்தாள் நீலா.

தந்தை வந்தார்!

"அப்பா..." என்றலறினுள் நீலா. துயரத்தால் துடித்தழும் மகளின் நிலை கண்ட, அவர் கண்களும் கலங்கின.

"இதோ பார்... நீலா... நான், கடமையைச் செய்யவேண்டிய அவசியத்தால், சட்டத்திற்கு அடிமையாகிவிட்ட ஒரு போலீஸ் உத்தியோகஸ்தன்..." அவர் குரல் தழுதழுத்திருந்தது.

"அப்பா...... அவருக்கு விடுதலையே கிடைக்காதா?..." அவள்

கண்களில் பெருகிய நீர், கன்னத்தின் வழியாக உருண்டோடியது.

"ஏன் கிடைக்காது?...கருணாகரனுக்கும் கம்யூனிஸ்ட் இயக்கத்திற்கும் தொடர்பில்லையெனத் தெரிந்தால்—அப்படித் தொடர்பிருந்தாலும், தான் இனிக் கம்யூனிஸ்ட்களுடன் தொடர்பு கொண்டு செயலாற்றுவதில்லை யென்று, அவன் மன்னிப்புப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டால், நிச்சயம் விடுதலை கிடைக்கும்..."

"அப்பா......சிறையில் அவருக்கு எவ்விதக் குறைவுமின்றி..."

"நீலா......அந்த விஷயத்தில் உனக்கு மட்டும்தானா அக்கரை?.........நீ சொல்வதற்கு முன்பே, அவைகளுக்கான ஏற்பாடுகள் யாவும் செய்துவிட்டேன்..." என்ற அவர் நீர் துளிர்க்கும் விழிகளுடன் நிற்கும், தன் மகளைப் பார்க்க விரும்பாதவர் போல் மாடிக்குச் சென்றுவிட்டார்.

குளத்திலிருந்து பிடுங்கித் தரையில் எறியப்பட்டு சூரிய வெப்பத்தால் துவண்டுபோன, தாமரைத் தண்டைபபோல், கட்டில் போய் விழுந்து தலையணையில் முகத்தைப் புதைத்துக் கொண்டு விம்மினாள் நீலா.

●

கூண்டிலடைக்கப்பட்ட போதிலும் காம்பீர்யம் குறையாத சிங்கத்தைப்போல், மனத் தளர்ச்சியோ, மனக்கலக்கமோ இன்றிக் கருணாகரன் சிறையிலிருந்தான். சிறையில் தனக்குக் கொடுக்கப்படும் உணவை அவன் ஏறெடுத்தும் பார்க்கவில்லை. ஆனால்—தனக்கு வெளியிலிருந்து உணவு வேண்டுமென்று சிறையதிகாரிகளிடம், அவன் விண்ணப்பித்துக் கொள்ளவுமில்லை!

இரவில் அவன் சரியாகத் தூங்குவது கிடையாது. எதையோ சிந்தித்தவண்ணம், சிறையின் அந்தகார அமைதியுடன் ஒன்றிப்போய், அங்கு மிங்கும் உலவிக்கொண்டே இருந்

தான். உள்ளத்தில் கொந்தளிக்கும் எவ்வித உணர்ச்சியையும் பாவம் பிடித்துக் காட்டாமல், எப்பொழுதும் போலவே சாதாரணமாக இருந்தது அவன் முகம்.

இன்ஸ்பெக்டர் சுந்தரலிங்கம் பிள்ளை அவனை நாலைந்து முறை சிறையில் சந்தித்தார். ஏதேனும் சௌகரியக் குறைவாக இருந்தால், தன்னிடம் தெரிவிக்கும்படி கேட்டுக் கொண்டார்.

தான், பூரணத் திருப்தியுடன் எவ்விதக் குறையுமின்றி இருப்பதாகத் தெரிவித்து விட்டான் கருணாகரன்.

●

உணவும், உறக்கமுமின்றிச் சிறையில் இருக்கும் கருணாகரனின் உடல்நிலை நாளுக்கு நாள் கேவலமாகிக்கொண்டு வருவதை வீட்டிற்கு வரும் போலீஸ்காரர்கள் மூலம் அறிந்த நீலா, வாய் விட்டு அழுததுடன், என்ன செய்வதென்றறியாமல் குழம்பித் தவித்தாள்.

தந்தையின் மூலம் உணவு கொடுத்தனுப்பிப் பார்த்தாள், அவன் பெற்றுக் கொள்ள மறுத்து விட்டான். காரணம் அவளுக்குப் புலனாகவில்லை.

நீலா எதிர்பார்த்தபடி அவன் மன்னிப்புப் பத்திரம் எழுதிக் கொடுத்துவிட்டோ—சட்டபூர்வமான மற்றெந்த விதத்திலோ, சிறையிலிருந்து விடுதலை பெற முயற்சிப்பவனாகத் தோன்றவில்லை! இது, அவளுக்குப் பெரியதோர் ஏமாற்றமாக இருந்தது. என்ன செய்வதென்று அவளுக்குப் புரியவில்லை.

புகை படிந்த பனித்திரையால் மூடப்பட்ட தூரத்துக் காட்சி போல் தெளிவற்ற நிலையிலிருந்தது, அவள் மனம்.

யோசித்தாள்! முடிவாக ஒரு தீர்மானம்!

"சிறையிலேயே அவரைச் சந்தித்தால்......ஆம்.....அது தான் சரி......அவர் எண்ணத்தையும் நாம் தெளிவாகத் தெரிந்து கொள்ள முடியும்!..." இந்தத் தீர்மானத்தால், கலங்கியிருந்த அவள் மனம் சற்றே தெளிவடைந்தது.

கைகளைப் பின்னால் கட்டியபடி சிறைக்குள் அங்குமிங்கும் உலவிக் கொண்டிருந்த கருணாகரன், சட்டென்று நின்றான். வெளியில் பார்வையை செலுத்தினான்.

வெளியில் இரும்புக் கம்பிகளைப் பிடித்தபடி நீர் நிறைந்த கண்களுடன் நீலா நின்று கொண்டிருந்தாள்.

"யார்? நீலாவா? வா..." என்றான் கருணாகரன், ஒரு கம்பீரப் புன்னகையுடன்!

அவள் மௌனமாகவே நின்றாள்.

சிறைக் கதவுக்கருகில் அவன் நெருங்கிவந்தான். கம்பி இடுக்கு வழியாகக் கையை விட்டு இலேசாக அவள் முகத்தை நிமிர்த்தினான்.

"நீலா......ஏன் அழுகிறாய்? இப்பொழுது அழும்படி என்ன நடந்துவிட்டது?......" பதட்ட

மற்ற குரலில் அமைதியாகக் கேட்டான்.

"என்ன நடந்துவிட்டதா?... மாளிகையில் வாழ வேண்டிய நீங்கள், மண் குடிசையினும் கேவலமான சிறையில் அடைபட நேர்ந்ததை விட, இன்னுமென்ன நடக்க வேண்டும்?..." துயரத்தால் அவள் குரல் தழு தழுத்திருந்தது.

"இந்தச் சிறையா கேவலமானது?... இதுதான் இலட்சிய வீரர்களை உருவாக்கும் புனித பூமி..."

"அதிருக்கட்டும்.........நான் கொடுத்தனுப்பிய உணவை எதற்காக வேண்டாம் என்று திருப்பியனுப்பிவிட்டீர்கள்?..."

"துன்பங்களைத் தாங்கும் வலிமை இருக்கிறதா வென்று எனக்கு நானே இங்கு பரீட்சை செய்து கொள்கிறேன்..."

"இதோ பாருங்கள்... அப்பா சொல்கிறார்......விடுதலை பெற எத்தனையோ மார்க்கமிருக்கிறதாம்...மறுக்காமல் நான் சொல்கிறபடி கேளுங்கள்...மன்னிப்புப் பத்திரம் எழுதிக்கொடுத்து விடுங்கள்......நிச்சயம் விடுதலை கிடைக்கும்..."

"மன்னிப்புப் பத்திரம் எழுதிக் கொடுப்பதா? அது, கொள்கைப் பற்றில்லாத கோழைகள் செய்யும் காரியம்!..."

"உங்கள் முன் கண்ணீருடன் நின்று கதறும் என் ஒருத்திக்காகவாவது, அதை நீங்கள் எழுதிக் கொடுக்கக் கூடாதா?..."

"கோடிக்கணக்கான மக்களுக்கு வாழ்வளிக்கும் கொள்கைகளை, உன் ஒருத்திக்காக உதறித் தள்ளிவிட நான் தயாராய் இல்லை!..."

"என்னை உங்களுக்குத்தானே திருமணம் செய்து கொடுப்பதாய் அப்பா நிச்சயித்திருந்தார்— இன்னும் நிச்சயித்திருக்கிறார்..."

"எதிர்காலத்தையும், நிகழ்காலத்தையும் பிணைத்துப் பேசுவது அர்த்தமற்றதென்பது என் கருத்து..."

"அப்படியானால்...! என்னை மணந்து கொள்ள உங்களுக்கு விருப்பமில்லையா?"

"விருப்பமுண்டு...அதற்காகப் புனிதமான கொள்கைகளைப் புறக்கணித்து விட நான் தயாராய் இல்லை..."

"கொள்கை-இலட்சியமென்று பேசி ஒரு பெண்ணின் இதயத் துடிப்பை அறிய முடியாத நீங்கள், எதற்காக என்னைக் காதலித்தீர்கள்?..."

"உன்னைக் காதலித்தேன்... உண்மைதான்!.........என து கொள்கைகளுக்கும் இலட்சியங்களுக்கும், நீ ஊக்கமாயிருப்பாயென்று உன்னைக் காதலித்தேன்...ஆனால், இன்று கண்ணீரைக் காட்டி, கொள்கையில் நான் கொண்டிருக்கும் உறுதியைத் தீய்க்கப் பார்க்கிறாய்!..."

"முடிவாக உங்கள் எண்ணம் தான் என்ன?..."

"என் எண்ணமா?...அரசாங்கம் என்னை விடுதலை செய்ய வேண்டும்! அப்படியில்லாமல், என்னை விடுதலை செய்யுமாறு அரசாங்கத்திடம் நானாகக் கேட்டுப் புனிதமான கொள்கையை—

இலட்சியத்தை நான் அடகு வைக்க மாட்டேன்..." கொள்கையில் அவன் கொண்டிருக்கும் உறுதியைப் பிரதிபலித்தது குரல்.

கண்ணீர் வடித்தவாறு மௌனமாக நின்றாள் நீலா. சிறிது நேரம் அமைதியிலேயே கரைந்தது.

"எதையும் நன்றாகச் சிந்தித்துச் செய்யுங்கள்...நான் வருகிறேன்..." என்று கண்களைத் துடைத்துக் கொண்டு அங்கிருந்து அகன்றாள் நீலா.

சிறையின் அமைதியுடன் ஒன்றி, மீண்டும் குறுக்கும் நெடுக்குமாக உலவ ஆரம்பித்தான் கருணாகரன்.

●

அருந்தும் நீரும், சுவாசிக்கும் காற்றும் எத்தனை நாளைக்கு உடலைத் திடகாத்திரமாய் வைத்திருக்க முடியும்? உணவின்றி உறக்கமின்றிச் சிறையில் இருக்கும் கருணாகரனின் உடல்நிலை மிகமிக மோசமாகி விட்டது. தினமும் நான்கைந்து முறை மூர்ச்சித்து விழ ஆரம்பித்தான்.

அன்றொரு நாள்!

நடக்கக் கூட ஜீவனற்று மிகவும் சோர்ந்து சிறையில் உட்கார்ந்திருந்தான் அவன்.

சிறைக்கதவு திறக்கப்படும் சப்தம்! ஆச்சரியத்துடன் திரும்பிப் பார்த்தான் கருணாகரன். இரு போலீஸ்காரர்களும், டாக்டர் ஒருவரும் சிறைக்குள் நுழைந்தனர்.

"என்ன விஷயம்?......எங்கு வந்தீர்கள்?......" துடிப்புடன் எழுந்து நின்று கேட்டான் அவன்.

"மிகவும் பலவீனமாக இருக்கும் உங்களுக்கு, தகுந்த வைத்திய வசதி அளிக்க வேண்டுமென்பது, மேலிடத்து உத்திரவு" என்றான் ஒரு போலீஸ்காரன்.

"பைத்தியக்காரர்கள்........ எனக்கா சிகிச்சை?......பொது உடைமைக் கத்தியால் கீறிக் கிழித்து ரணசிகிச்சை செய்யப்பட வேண்டியது, பொருளாதார ஏற்றத் தாழ்வால், புரையோடிய புண் கொண்டிருக்கும் இன்றைய சமூகம்தான்!...... சிகிச்சை, எனக்குத் தேவையில்லை...நீங்கள் போகலாம்..." என்றான் கருணாகரன் ஆத்திரத்துடன்!

"பைத்தியக்காரன்!" டாக்டரும் போலீஸ்காரர்களும் சென்றுவிட்டனர்.

சிறைக் கதவை இழுத்துப் பூட்டும்பொழுது ஏற்பட்ட "கிரீச்" என்ற ஒலி, அதிக நேரம் நீடிக்கவில்லை!

●

சில நாட்கள் கழித்து ஓர்நாள்!

போலீஸ் இன்ஸ்பெக்டர் சுந்தரலிங்கம் பிள்ளை, தமது தனி அறையில் உட்கார்ந்து தம் இலாகா சம்பந்தப்பட்ட கடிதங்களைப் பார்வையிட்டுக் கொண்டிருந்தார்.



"பட்டணத்துக்குப் போறதுன்னு, மனுசர் கண்ணிலே படாமே ஜாக்கிறதையாப் போய்ட்டு வரனும். அங்கே எட்டவுன்ஸ் அரிசிதான் போடறுங்களாம்"

போலீஸ்
தலைமைக் காரியாலயம்
18—7—50

.........நாளை 19—7—50 நடுப்பகல் 2 மணிக்கு, கால வரையறையின்றிக் காவலில் இருக்கும் எல்லாக் கம்யூனிஸ்ட் கைதிகளையும், விடுதலைசெய்ய வேண்டியது...

போலீஸ் தலைமை அதிகாரி

....

விழிகள் பிதுங்கி வெளியில் விழுந்து விடுவதுபோல், இமைக்கக் கூட மறந்து, இந்த உத்தரவைத் தாங்கி வந்த கடிதத்தை வெறித்துப் பார்த்தார். பலமுறை படித்தார்.

"அப்பா...!"

மனச் சுமையைத் தணிக்கும் ஒரு நீண்ட பெருமூச்சு!

"நாளை கருணாகரன் விடுதலையடைந்து விடுவான்......சூன்யமாகி இருள் படர்ந்தது போல் இருந்த நீலாவின் வாழ்வில், இனி மகிழ்வும், இன்பமும் சுடர்விட்டுப் பிரகாசிக்கும்... இந்தச் செய்தியைக் கேட்டால், நீலா எவ்வளவு குதூகலமடைவாள்?..."

அவருக்குக் காரியாலயத்தில் உட்கார்ந்திருக்கப் பிடிக்கவில்லை! மகிழ்ச்சி மிக்க இச்செய்தியை நீலாவிடம் சொல்லி, அவளை வியப்பிலும், குதூகலத்திலும் ஆழ்த்தி, புன்னகையால் மலர்ச்சி பெறும் அவள் முகத்தைக் காணத் துடித்தார். புன்னகை தவழும் அவள் முகத்தைக் கண்டுதான் எத்தனை நாட்களாயின?

வீட்டிற்கு விரைந்தார் சுந்தரலிங்கம் பிள்ளை...

"நீலா...நீலா..." கூவியபடி வீட்டிற்குள் நுழைந்தார் அவர்.

"ஏனப்பா...?" என்ற கேள்வியுடன் வந்தாள் நீலா.

"இதோ பார்...கருணாகரன் விடுதலைக்கான உத்தரவு..." கடிதத்தை அவளிடம் நீட்டினார்.

"அப்பா! நிஜமாகவா?" —

"வேடிக்கை இல்லை...உண்மைதான்...நாளை நடுப்பகல் பன்னிரண்டு மணிக்குக் கம்யூனிஸ்ட் காவற் கைதிகள் யாவரையும் விடுதலை செய்துவிட வேண்டும் — இது சர்க்கார் உத்தரவு!"

"அப்பா...!" — நீண்டதோர் பெருமூச்சுடன் அவர் மார்பில் சாய்ந்தாள் நீலா.

கனிவுடன் கூந்தலை வருடி விட்டார் அவர். சிறிது கழித்து வேடன் கணைக்குத் தப்ப முயற்சித்தோடும் மான்போல் மாடிக்கு ஓடினாள். தலைவாரிப் பின்னிக் கொண்டாள். அழகாக உடை உடுத்திக்கொண்டு மாடிப்படியேறும் வழியில் வந்து நின்றாள்.

சிட்டுக்குருவி போல் குதூகலித்து ஓடியாடும் நீலாவைக் கண்டு பூரித்துப் போனார். புன்னகையுடன் பூரண நிலவையும் மிஞ்சும் அழகுடன் நிற்கும் அவளையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"சார்...சார்..." என்ற கூக்குரல்!

"யாரது?..." என்ற கேள்வியுடன் வாயிற்படிப் பக்கம் திரும்பினார். அவளும் திரும்பிப் பார்த்தாள்.

"நான்தான் சார், இருநூத்தி முப்பது" என்றபடி உள்ளே நுழைந்தான் போலீஸ்காரன்.

"ஏனப்பா.....டூதார்ட்டி...... என்ன விசேஷம்?" என்று கேட்டார் அவர்.

"சிறையிலிருந்த கம்யூனிஸ்ட் காவற் கைதி கருணாகரன், திடீர்னு கீழே விழுந்து இறந்துட்டாருங்க..." என்றான் இருநூத்தி முப்பது.

"ஹா!..." என்றலறிய இன்ஸ்பெக்டர் சுந்தரலிங்கம் பிள்ளை மூர்ச்சித்து விழுந்த நீலாவை, ஓடிப்போய்த் தாங்கிப் பிடித்துக் கொண்டார்.

போன் : 2549 தந்தி: "IMAGE"

எங்களிடம்

ஜன்னல் கண்ணாடிகள்
பலநிறக் கண்ணாடிகள்
முகம்பார்க்கும் கண்ணாடிகள்
மூன்றேட்டுப் பலகைகள்
படங்கள், சட்டங்கள்
மேசைக் கண்ணாடிகள்
முதலியன கிடைக்கின்றன.

R. ETHIRAJIAH & SONS

103, Devaraja Mudali Street, P. T., Madras - 3.

பெண்கள் முன்னேற்றம்

மங்கை

3

இரண்டு பெண்கள் கூடினால் பேச்சுக்கா குறைவு? 'நேரமாகி விட்டதே' என்பதையும் மறந்து பார்வதி, சரசாவுடன் உரையாடிக்கொண்டிருந்தாள். சமையலைப்பற்றி அவர்கள் பேச்சு வளரத் தொடங்கியது.

"கோதுமை உடற் பலத்தையும் சத்தையும் அதிகரிக்கச் செய்கிறது... இன்னும் கேள்; வடஇந்தியரின் கோதுமை உணவு நம்முடைய கேலிக்கிடமாயிற்றல்லவா? அதைப் போலவே மலையாளிகளின் உணவையும் தமிழர்கள் கேலி செய்கிறார்கள்!"

"மலையாளிகள் சமையல் செய்வதில் கெட்டிக்காரர்களாயிற்றே?"

"அவர்களிடமிருந்து நாம் கற்றுக்கொள்ள எவ்வளவோ இருக்கிறதடி! எனினும் 'கஞ்சி குடிக்கும் மலையாளி சோற்றைக் கண்டால் விடுவானா?' என்கிறார்களே தமிழர்கள் — அது வேடிக்கையாக இல்லையா?"

"ஏன்? எனக்குப் புரியவில்லையே!"

"மலையாளிகள் காலையில் பெரும்பாலும் 'கஞ்சி' குடிப்பதுண்டு. சோறு வெந்ததும் தண்ணீரை இறுக்காமல் அப்படியே இறக்கிவைத்துவிடுகிறார்கள். பிறகு அந்தத் தண்ணீரோடு சேர்த்துக் கஞ்சியாக உண்ணுகிறார்கள். அதில் என்ன தவறு? அந்தத் தண்ணீரில்தானே அத்தனை சத்தும்இறங்கியிருக்கிறது? அந்த 'இரகசியம்' அவர்களுக்குத்தான் தெரிகிறது!"

"கேலி என்ன இருக்கிறது? அப்படித்தான் நம்மவர்கள் கஞ்சி குடிப்பதில்லையா? 'கஞ்சி குடித்தேன்' என்றுதானே ஒவ்வொருவர் வாயிலும் பேச்சைக் கேட்கிறோம்! மலையாளிகள் கஞ்சித்தண்ணீரை இறுக்காமல் குடிக்கிறார்கள். நம்மவர் அதை இறுத்துவிட்டு வெறும் சோற்றில் பச்சைத் தண்ணீரை ஊற்றிச் சாப்பிடுகிறார்கள். வித்தியாசம் என்ன?"

"அவர்கள் சத்தைப் புறக்கணிக்கவில்லை. நாம் புறக்கணிக்கிறோம். அவ்வளவுதான் வித்தியாசம்!"

"மற்ற நாட்டார் உண்ணும் உணவுகளில் நல்லதாகத் தோன்றுகிறதை நாமும் கற்றுக்கொண்டால் மிகவும் பயனுண்டு"

"வெள்ளைக்காரர்களைப் பாரேன். சாப்பாட்டிற்குப் பிறகு ஏதாகிலும் பழம் சாப்பிடுவது

அவர்களின் வழக்கமாயிருக்கிறது. பழமில்லாமல் அவர்களால் வாழமுடிகிறதா?"

"ஆமாம்; நமது நாட்டில் விதவிதமான பழங்கள் உண்டு. எச்சமயமும் ஏதாகிலும் பழங்கள் வாங்கலாம். நமது உணவைப் பற்றி நாம் கவனம் செலுத்துவதில்லை. சாப்பாட்டிற்குப் பிறகு பழம் புசித்தால் எவ்வளவு நல்லது! ஆனால் அழுகிப்போன பழங்களைத் தீண்டவும் கூடாது!"

பார்வதி சில வினாடிகள் மௌனம் சாதித்துவிட்டுப் பிறகு திடீரென்று, "ஏண்டி சரசு, உனக்கு மீன் சமையல் செய்வதென்றால் விருப்பமுண்டா?" என்று கேட்டாள்.

"எனக்கு அதிக விருப்பமில்லை. ஆனால் என் கணவர் அதை விரும்புவதனால் அடிக்கடி மீன்கறி தயாரிப்பதுண்டு" என்று பதிலளித்தாள் சரசு.

"மீன் நல்ல ஆகாரமே. ஆனால் அழுகிய மீன் ஆபத்தை உண்டாக்கும். நிறம் கம்மிப்போன மீனும், துர்நாற்றமடிக்கும் மீனும் கெட்டுப்போயிற்று என்பதற்கு அறிகுறிகள். அப்பேர்ப்பட்ட மீனைச் சாப்பிடுவதனால் காலரா முதலிய நோய்கள் உண்டாகின்றன."

"சிலருக்கு மீனிற்கே இயற்கையாகவுள்ள வாசம் பிடித்தமிருக்காது. அவர்கள் மீனை உண்ணமலிருப்பது நல்லது."

"மீன் சமையல் செய்யுமன்று வீட்டில் ஒருவிதத் துர்நாற்றம் புகுந்துவிடுகிறதல்லவா?"

"ஆமாம். ஆனால் மீன் சுத்தம் செய்தவிடத்தை நன்றாகக்கழுவி 'லோஷன்' தெளித்துவிட்டால் சரியாகிவிடும். அதுமட்டுமல்ல; எப்பொழுதுமே சமையல் வேலைமுடிவடைந்ததும்சமையற் கட்டைத் தண்ணீரால் கழுவிச் சுத்தம் செய்வது சாலவும் நல்லது."

பார்வதியின் கண்கள் மறுபடியும் சரசுவின் அடுக்களையை வலம் வந்தன. "ஏண்டி, உன்னுடைய சமையற்கட்டு எவ்வளவு அழகாயிருக்கிறது!" என்றாள்.

"அதில் ஆச்சரியமென்ன இருக்கிறது? எப்பொழுதும் சமையல் வேலை முடிவடைந்ததும் அடுக்களையைக் கழுவிச் சுத்தம் செய்து, பாத்திரங்களை அந்தந்த இடத்தில் ஒழுங்காக அடுக்கிவைத்தால் அழகுதானே வருகிறது! சிலபெண்கள் தங்கள் அடுக்களையில் 'வேற்று ஜாதி'ப் பெண்களை அனுமதிக்கமாட்டார்கள். அதனால் சுத்தமும் அழகும் வந்துவிடப்போவதில்லை. சிலர், மண் பாண்டங்களை உபயோகிப்பதைக் கேவலமாகக் கருதுகிறார்கள். ஆனால் சமையலை மண்பாத்திரங்களில் சமைப்பதே மிகவும் நல்லது, சமையல் ஆரோக்கியமானதாகவும் ருசிகரமானதாகவுமிருக்கும். கழுவிய பாத்திரங்களைத் தலைகீழாகக் கவிழ்த்து வைக்கவேண்டும். அப்போதுதான் தண்ணீர் உள்ளே தேங்கி நிற்காமல் வடிந்துபோய்விடும். நான் அவ்விதம் செய்வது வழக்கம்."

"சில பெண்கள் ஒரு சமையல் செய்தால் அதைப் பல நாட்கள் வைத்திருந்து சாப்பிடுகிறார்களே — அது நல்லதா?"

"நிச்சயமாக அல்ல. வெப்பம் நிறைந்த நம் நாட்டில் உணவுப் பொருள்கள் சீக்கிரம் ஊசிப்போகும். அதைச் சாப்பிடுவதினால் நோயுண்டாகாதா என்ன? இன்னும், நாம் குடிக்கும் தண்ணீரை நன்றாகக் கொதிக்கவைத்துப் பின் அதை ஒரு மண் ஜாடியில் குளிர வைத்து உபயோகிப்பது மிகவும் நல்லது. வீட்டுக்காரி இவ் விஷயத்தில் கவனம் செலுத்தினால் என்றும் சுத்தமான தண்ணீர் 'குடிக்கலாம். ஆரோக்கியமாகவும் வாழலாம்!"

"நான் நேற்று ஒரு புத்தகம் படித்தேன் — என் பெண் பள்ளிக்கூட நூல்நிலையத்திலிருந்து எடுத்து வந்தது. அதில், வெள்ளைக்காரப் பெண்கள் சமையல் செய்வதைப் பற்றி எத்தனை அழகாக வர்ணனை செய்திருந்தது! அவர்களின் 'ஒழுக்கமே' ஒரு அழகுதானடி! சமையல் செய்யும்போது சட்டையில் அழுக்குப் படியாமலிருக்க இடுப்பைச்சுற்றி ஒரு துணி கட்டிக்கொள்கிறார்களாம். அதைப் போல் நாமும் பழகிக் கொண்டால் எவ்வளவு நன்றாக இருக்கும்!"

"நான் அவ்வாறு செய்ய வேண்டுமென்று நினைப்பதுண்டு. எனினும் ஒருவிதச் சோம்பல் குறுக்கேவந்து தடுத்துவிடுகிறது! நமது புடவை சுத்தமாக இருக்க வேண்டுமானால் அவ்விதம் ஒரு துணியை இடுப்பில கட்டிக் கொள்வது நலலது!"

"பாரேன், ஒரு வீட்டுக் காரியின் 'வேலைக் கூடமே' சமையற் கட்டுத்தானே! அவளது சாமர்த்தியமும் ஒழுக்கமும் அதன் மூலமாகவே வெளிப்படும்! எத்தனையோ விதமான வேலைக் கூடங்கள் இருக்கின்றன. அவற்றுள் வீட்டுக்காரியின் வேலைக்கூடமான சமையற் கட்டே மேன்மையானது. ஆதலால் அதை ஒழுங்காகவும் அழகாகவும் வைத்துக்கொண்டிருப்பது அவள் கடமையல்லவா? வீட்டுக்காரி தனது சமையற்கட்டில் சாமான்களை ஒழுங்குமுறையாக அதனதனிடத்தில் வைத்திருந்தால் அவளது வேலைப் பாரம் சற்றுக் குறையும். ஏனென்றால் 'அதைக் காணோம். இதைக் காணோம்!' என்று அவள் தேடியலைய அவசியமில்லையல்லவா? இன்னொன்று. அடுக்களையில் பெரிய ஜன்னல் அமைத்திருக்க வேண்டும். ஏனெனில் உள்ளே எப்பொழுதும் நல்ல காற்று வந்துகொண்டிருக்க வேண்டும். இதை நம்மவர் சிறிதும் கவனிப்பதில்லை."

"எனது சமையற்கட்டில் எப்பொழுதுமே நல்ல காற்று வந்துகொண்டுதான் இருக்கிறது. ஜன்னலும் பெரிய ஜன்னல் பார் அதனால்தான்!"

[இப்பகுதி தொடர்ந்து வரும்]

பலி

பண்டரிநாதன்

புத்தகக் கூண்டில் அடைபட்டிருந்தேன். காண்டேகரின் 'எரி நட்சத்திரம்' என்ற கதை. ஆசிரியர் அழைத்துச்சென்ற கற்பனை உலகில் உலாவினேன்; வார்த்தைகளுடன் ஓடினேன்; பக்கங்களுடன் பறந்தேன்.

வெளியிலிருந்து ஒரு குரல் வந்தது. "பண்டரி! உள்ளே வரலாமா?" அறையை மூடியிருந்த அமைதித் திரை கிழிக்கப்பட்டது. மீண்டும் ஒரு புதிய குரல் காதில் மோதியது. "எந்த உலகில் இருக்கிறாய்?" பக்கங்களுடன் பறந்துகொண்டிருந்த கவனப் பறவையை அவ்விரு பேச்சுக் கற்கள் தாக்கி, வீழ்த்தி விட்டன. திரும்பிப் பார்த்தேன்; சண்முகானந்தமும் மகாலிங்கமும் நின்றுகொண்டிருந்தனர்.

நான் கண்டிப்பான பேர்வழி; இளம் எழுத்தாளன். பத்திரிகை வானில் விழி சிமிட்டி விளையாடும் சின்னஞ்சிறு விண்மீன். ஆகவே என் அறையைச் சந்திப்புச் சாலையாகவும்—பேச்சுமேடையாகவும்—விளையாட்டுக் கூடமாகவும்—ஆக்கிக்கொள்ளவில்லை. எனவே, எவர் வந்தாலும் "அனுமதி பெற்ற பின்பே அறையில் நுழையவேண்டும்" என்ற சட்டம் கட்டாயமாக்கப்பட்டது. ஆனால் வாசலில் நின்றுகொண்டு வாய் கிழிய அழைக்கும் பழக்கம் வந்தவர்களிடம் ஒட்டிக்கொண்டிருந்தது. சட்டம் அங்கே பாடாத குயில்; ஓடாத ஆறு. பலன் தரவில்லை.

"என்னப்பா! பார்த்தும் பாராதவன்போல் பாவனை காட்டுகிறாயே! உள்ளே வரவா? உத்தரவை உடைக்கவா?" என்று கேட்டான் சண்முகானந்தம்; கேலியாலும், கோபத்தாலும் கட்டப்பட்ட வார்த்தைகளைக் கொட்டினான்.

என் தலை அசைந்தது. 'உள்ளே வரலாம்' என்ற 'வாய்ச் சொல்லின் பிரதிநிதியாக. இருவரும் அறையில் நுழைந்தனர். மேசையின் இரு பக்கங்களிலும் சாய்ந்துகொண்டு நின்றனர்.

மகாலிங்கத்தின் விழிகள் புத்தகத்தின் மீது விழுந்தன. "காண்டேகரா?" என்று சொல்லிக்கொண்டு புத்தகத்தை எடுத்து, பக்கங்களை ஓட வைத்தான்.

"என்ன சங்கதி?" என்று கேட்டேன் நான்.

"ஒன்றுமில்லை" என்று ஆரம்பித்தான் சண்முகானந்தம்.

இடையில் புகுந்தான் மகாலிங்கம். "நீ எப்பொழுதும் இப்படித்தான் இருக்கிறாய்! 'ஒன்றுமில்லை' என்ற சிறு சொல்தான் உன் நீண்ட பேச்சிற்கு அஸ்திவாரக் கல்லா?" அதைச் சொல்லிவிட்டுக் 'கல கல'வெனச் சிரித்தான்.

"அஸ்திவாரம் சிறியதுதான்; ஆனால் பெருங் கட்டடத்தைத்

தாங்குவது எது?, அதுதானே!" என்று தட்டிக் கொடுத்தேன் நான்.

சண்முகானந்தத்தின் சுருங்கிய முகம் விரிந்து, மலர்ந்தது. "'புயல்' ஆண்டு மலர் தயாராகிவிட்டது. அதை உம்மிடம் காட்டத்தான் வந்தோம்."

'புயல்'! அது எங்கள் உழைப்பின் உருவம். நானும் நண்பர்களும் சேர்ந்து நடத்தி வரும் கையெழுத்துப் பத்திரிகை.

"கதைப்போட்டியில் யாருக்கு முதல் பரிசு?" என்று கேட்டேன்.

"மாதவிக்குத்தான். கதையைப் படித்துப் பார்த்துவிட்டு ஆசிரியர் கருத்தைத் தெரிவிக்க வேண்டும்" என்றான் மகாலிங்கம்.

சண்முகானந்தத்தின் கையில் தொங்கிக் கொண்டிருந்த பையிலிருந்து "புயல்" வெளி வந்தது. "அழகாக அமைந்திருக்கின்றது அட்டைப் படம்" என்ற ஆச்சரியமான வார்த்தைகளை உதிர்த்துவிட்டு, பக்கங்களைப் புரட்டிப் 'பலி'யில் பார்வையைப் பதித்தேன்.

•

கடிகாரம் பேசியது. ஓட்டப் பந்தயத்தில் கலந்துகொண்டு வெற்றி பெற்றவன் இடைவிடாது மூச்சு விடுவதுபோல் நிற்காமல் பத்து தடவை கத்தியது. ஒருவரும் பதில் தரவில்லை என்ற வருத்தமோ என்னவோ, முணுமுணுக்கத் தொடங்கியது.

"மாணிக்கம், கல்லூரிக்குச் செல்ல நேரமாகவில்லையா?" என்று கேட்டார் மாணிக்கத்தின் தந்தை.

"இதோ புறப்படுகிறேன். ஆனால்..." என்று இழுத்தான் மாணிக்கம்.

"மணி பத்தாகிவிட்டது. ஐந்து மைல்களைக் கடக்க வேண்டாமா? ஏதாவது வேலை மிச்சமிருந்தால் அங்குபோய்ச் செய்!" அவர் குரலில் கொஞ்சம் கண்டிப்புக் கலந்திருந்தது.

"இல்லையப்பா....'இண்டியன் ஹிஸ்டரி மேப்'புக்குக் கலர் கொடுக்கிறேன்."

அங்கே மேலும் பேச்சுக் குரல் கேட்கவில்லை. கடிகாரத்தின் "டிக்டிக்" என்ற சிறு ஒலி மரண அமைதியுடன் வாக்குவாதம் நடத்திக் கொண்டிருந்தது. வேலையை முடித்துவிட்டுத் தலையை நிமிர்த்திக் கடிகாரத்தைப் பார்த்தான் மாணிக்கம். 'பத்தேகால்' என்று பதட்டமான குரலில் கூவியது வாய். எழுந்து நடந்தான். மேசையிலிருந்த சில புத்தகங்கள் பையில் குடிபுகுந்தன.

"அப்பா, சென்று வருகிறேன்" என்ற வார்த்தையை வீசிவிட்டுச் சென்றான் மகன். வாசலில் சைக்கிள் மணி "டிங்-டாங்" என்று பாடிற்று.

அந்த அற்ப ஒலியலைகள் வீட்டிலிருந்த தந்தையின் காதில் விழுந்தன. "மாணிக்கம், எதிர்க் காற்றுக் காலம்; நேரமானாலும் பரவாயில்லை. மெதுவாகச் செல்", என்று கத்தினார். நேரமாகிவிட்-

டதே என்று துடித்து, அன்பாக அதட்டிப் பேசியவர், "மெதுவாகச் செல்" என்று சொல்வதேன்? சிறிது நேரத்தில் ஏன் இந்த மாறுதல்? அது தான் அன்பின் சக்தி; மகன் என்றும் மகிழ்ச்சி வெள்ளத்தில் மிதக்கவேண்டும் என்ற பாசத்தின்மீது எழுந்த சொற்கள்.

சைக்கிள் ஓடிக் கொண்டேயிருந்தது. காற்றைக் கிழித்துக் கொண்டு சக்கரங்கள் உருண்டு கொண்டிருந்தன. புழுதியையும், தூசியையும் அள்ளிக் கொண்டு வந்த பெருங்காற்று வேகமாக வந்து சைக்கிளைச் சந்தித்துவிட்டுச் சென்றது. அவன் விழிகளில் தூசி புகுந்தது. வேண்டாத விருந்தாளிகள் அழைக்காத வீட்டில் பலவந்தமாக நுழைந்து கூச்சலிட்டுக் கூத்தடித்தால் எப்படி வீட்டுக்காரியின் விழிகள் சிவக்குமோ, அதுபோல் அவன் கண்கள் செந்நிறம் பெற்றன, கைகுட்டை கண்களைக் கசக்கியதால். "சீ! எப்பொழுதும் எதிர்க்காற்றுத் தான்" என்று ஆத்திரமான வார்த்தைகள் வாயிலிருந்து சிதறின.

இது உண்மையா? ஆண்டு முழுதும் அடிப்பது எதிர்க்காற்றுத்தானா? இல்லை.

மனித மனம் விசித்திரமானது. 'கட்சியாட்சி'க்கு ஒப்பானது. கவலையின் நிழல் கூடப்படாத களிப்பில் குளித்துக் கொண்டிருக்க வேண்டுமென்று விரும்புகிறது. நிலைத்து நின்று குறிப்பிட்ட காலத்தில் வீசுவது தென்றல்; அசாதாரணமாய், காலக்கோளாறு ஏற்பட்டபோது அடிப்பது புயல். ஆனால், கால அளவில் துன்பத்தைத் தென்றலாகவும், இன்பத்தைப் புயலாகவும் எண்ணுவது ஏன்? "அப்பா! கணக்கு 'பீரியட்' சீக்கிரம் நகர மாட்டேங்கிறது! ஆனால் 'டிரில் பீரியட்' ரொம்ப சீக்கிரமாய் ஓடிப் போகுது" என்று கூறுகிறான் வாழ்க்கை ஆற்றின் வளைவுகளையும், அதில் ஏற்படும் சுழல்களையும் அறியாத சிறுபிள்ளை. மகிழ்ச்சியாகிய ஞாயிறு நாட்கள் என்னும் பனிக்கட்டியை எவ்வளவு விரைவாக உருக்கிவிடுகின்றது!

மாணிக்கத்தின் கால்கள் வேகமாக வேலை செய்தன- திருப்புவனத்தின் மேற்கோடி அவன் பார்வையிலிருந்து விலகி ஓடி விட்டது.

அம்மாசத்திரம் நெருங்கி வந்தது. மீண்டும் ஒரு பெருங்காற்று வீசிற்று. விழிகளில் மண்ணை அள்ளிப்போட்டு விட்டுச் சென்றது. கையிலிருந்த கைக்குட்டை கண்களுடன் உறவாடியது.

"பாம்...பாம்" நீண்ட சப்தம் எதிர்த் திசையிலிருந்து வந்தது. எதிரில் புழுதிப் போர்வையைப் போர்த்துக்கொண்டு வேகமாக ஓடிவந்தது ஒரு 'பிளஷர்'. சைக்கிளின் கைப்பிடியைச் சற்று இடது பக்கம் திருப்பினான். வேகமாக ஓடி வந்த சைக்கிள் சரிவில் இறங்கி ஓடி ஒரு வீட்டின்மேல் மோதியது.

"ஆ!" என்ற மெல்லிய, இனிய கீதக்குரல் கேட்டது. மாணிக்கத்தின் விழிகள் ஓடின. வீட்டு வாயிலில் நின்றுகொண்டிருந்த கயல் விழியாளைக் கண்டன.

"கையில் அடிபட்டுவிட்டது போலிருக்கே! இரத்தம் வழிவதைப் பார்த்தீர்களா? வலிக்கவில்லையா?" என்றாள் அந்தச் சிங்காரி. தேன்மொழிக் கிள்ளை மாணிக்கத்தின் அருகில் வந்து நின்றது.

அப்பொழுதுதான் மாணிக்கம் அவள்மீது ஒட்டிக்கொண்டிருந்த பார்வையை வெட்டிப் பிரித்து அடிபட்ட கையின்மீது செலுத்தினான். விரலின் நுனியிலிருந்து செந்நீர்க் கோடுகள் ஓடிக்கொண்டிருந்தன. வலியை அப்பொழுதுதான் உணர்ந்தான்.

"எங்கும் போகாமல் இங்கே இருப்பீர்களா? இதோ வந்துவிடுகிறேன்" என்ற இசையோசையைத் தந்துவிட்டுப் பைங்கிளி உள்ளே பறந்து சென்றது.

அவனுக்கு ஒன்றும் புரியவில்லை. உள்ளே ஓடிப் போன பூங்கொடி திரும்பி வந்து மணம் தந்தது. அவள் மலர்க் கையிலிருந்து தண்ணீர் சொட்டுச் சொட்டாக விழுந்து கொண்டிருந்தது.

"அடிபட்ட விரலைக் காட்டுங்கள்! ஈரத் துணியைச் சுற்றினால் இரத்தம் பிறப்பது நிற்கும்" என்று குயிலோசையில் பேசினாள்.

மாணிக்கம் தடை சொல்லாமல் 'அவள்' அதிகாரத்திற்குக் கட்டுப்பட்டான். அவள் அழகிய சிவந்த மெல்லிய விரல்கள் அவன் விரல்களுடன் உராய்ந்தன. அவன் நெஞ்சிலே புதிய உணர்ச்சி சஞ்சரித்தது. 'வைத்தியரின்' வேலை முடிந்துவிட்டது.

"உங்கள் உதவிக்கு நன்றி; வருகிறேன்" என்றான் மாணிக்கம்.

அவள் சிவந்த இதழில் சிரிப்புத் தவழ்ந்து ஓடியது.

என்ன எண்ணினானோ? "உங்கள் பெயர்" என்று நீட்டினான்.

இதழ்கள் பிரிந்தன. "மேகலே" என்ருள் மெதுவாய்.

"மேகலே" என்று அழைத்தான் மாணிக்கம். அன்பு வெள்ளம் ஓடியது.

அமிர்தம் ஊறும் அதரங்கள் விரிந்தன. வெண் முத்துப் பற்கள் எட்டிப் பார்த்தன. சிரிப்பொலி சிதறியது. பார்வை பதில் தந்தது. அவள் உருவம் மறைந்தது. நீண்ட பெருமூச்சு நெஞ்சைப் பிளந்துகொண்டு வந்தது. அவனும்புறப்பட்டான்.

2

"என்ன மாணிக்கம்! சிலந்தி போல் சிந்தனே வலேயைப் பின்னுகிருயா?" என்று கேட்டுக் கையிலிருந்த புத்தகத்திஞல் தலேயில் தட்டிஞன் சேகர்.

மேகலேயைச் சுற்றிப் பின்னப்பட்ட எண்ண வலே அறுந்து விழுந்தது. "யார் சேகரா?" என்று கேட்டான்.

"ஆம்! நான்தான். எண்ணம் எங்கே பறந்துகொண்டிருந்தது?"

"காலேயில் ஒரு புதிய உலகிற்குப் போய்வந்தேன். கையைப் பார்த்தாயா? மேகலேயின் வைத்தியத் திறனேச் சொல்லுமே!"

"ஓ! கண் வலேயில் விழுந்துவிட்டாயா? உண்மையில் புதிய உலகம்தான்.

"உலகம் என்று அழைப்பது கூட அவசியமில்லே. அதனே ஆழ்கடல் என்று அழைத்தால், அங்கே ஆனந்தம்தான் அலேகள். பரந்த பாலேவனம் என்று பெயர் தந்தால் மகிழ்ச்சிதான் மணல்.

"அவ்வளவு தூரம் காதற் பாதையில் ஓடிவிட்டீர்களா? மாரியைக் கூந்தலாகவும், மலேயை மார்பகமாகவும், ஆற்றை ஆரமாகவும், அலே ஒலிக்கும் ஆழியை ஆடையாகவும் கொண்டமண்ணக மடந்தையின் மடியில் மகிழ்ச்சியுடன் நீங்களிருவரும் ஆடிப்பாடி விளேயாடுங்கள்."

"வேடிக்கைபோதும், சேகர். அஸ்திவாரக் கல்லேக் கண்டவுடன், பேச்சால் கட்டிடத்தைக் கண்டு, மேன்மாடியில் உலாவத் தொடங்குகின்ருயே!"

"மாணிக்கம், உன் காதல் வளர்பிறையாகட்டும். ஆஞல் ஒன்றைமட்டும் நினேவில் நிறுத்திவை"

"என்ன சேகர்?"

"சேகர் என்ற நண்பன் இருப்பதாக நெஞ்சு கூறவேண்டும்"

"கவலேப் படாதே, சேகர். உன்னே என்னிடமிருந்து எதுவும் பிரிக்கமுடியாது"

"உண்மையாகவா?"

"ஆம். இளம் பருவம், இனக்கவர்ச்சி, புது உணர்ச்சி ஆகியவைகளின் உருவந்தான் காதல். ஆஞல் மனிதனின் ஆழ்ந்த இதயத்தின் அடித்தளத்திலிருந்து உதிக்கும் உணர்ச்சியை உருவாக்கிஞல், கிடைப்பது நட்பு. காதலேவிடத் தோழமையே உயர்ந்தது; சிறந்தது."

"என்னமோப்பா! உதடும் உள்ளமும் ஒன்ருகவே இருக்க வேண்டுமென்பதே என் ஆசை."

3

கல்லூரி மண்டபக் கோபுரத்திலிருக்கும் மணி நான்கு தடவை அலறி நின்றது. வகுப்பில், விடாமல் பேசிக்கொண்டிருந்த ஆசிரியரின் வாய் ஓய்ந்தது. புத்தகங்கள் 'படபட' வென்று இரைச்சல் தந்து, மூடிக்கொண்டன. ஆங்கிலப் பெருமண்டபத்தைவிட்டு அனைவரும் வெளியே வந்தனர். மாணிக்கமும் சேகரும் கடைசியில் வந்தனர்.

"மாணிக்கம், காலையில் நடந்த சம்பவத்தைக் கவனத்தில் வைத்துக்கொள். புன்னகையால் உன் நெஞ்சில் நெருப்புமூட்டும் இதயராணியைத் தரிசித்துவிட்டு ஊருக்குச் செல்" என்றான் சேகர்.

"சேகர், உனக்கு எப்பொழுதும் வேடிக்கைதான். விரித்து வைக்கப்பட்ட வலையில் விழுந்தால் தெரியும்."

"நடந்து ஒருநாள்கூட ஓடவில்லை. அதற்குள் மேகலையின் நினைவு உன் நெஞ்சை மெழுகுவர்த்தியாக்கி விடுகிறதோ? குதூகலத்தால் கூத்தாடும் ம மழைவிழியாளின் உருவம்தான் உன் நெஞ்சிருளைப் போக்கும். சீக்கிரம் செல். நானும் வருகிறேன்" என்று சொல்லி நடையைக் கட்டினான்.

மாணிக்கத்தைச் சுமந்துகொண்டு சைக்கிள் திருப்புவனத்தை நோக்கி ஓடியது. சிந்தனைச் சக்கரமும் உள்ளத் தரையைத் தேய்ந்துக்கொண்டே ஓடியது. அம்மாசத்திரத்தின் மேல் முனையைத் தாண்டினான். சைக்கிளின் ஓட்டம் தணிந்தது. கீழ்க்கோடி பார்வையில் அகப்பட்டது. அவன் கைவிரல்கள் மணியை வேகமாக அடித்தன. 'யானை வரும் பின்னே, மணி யோசை வரும் முன்னே.'

மேகலை வாசலில் நின்றுகொண்டிருந்தாள். விழிகளுக்கு விருந்தாக இருந்தாள். விற்புருவங்கள் வேல்விழிகளை வீசின; நேராக அவள் நெஞ்சில் பாய்ந்து இன்ப வேதனையை எழுப்பின. அவள் ஆடாமல், அசையாமல் சிற்பியின் சிற்றுளியிலிருந்து பிறந்த சிலைபோல் நின்றாள். அவன் கண்கொட்டாமல் பார்த்துப் பரவசமடை்தான். அவன் உலர்ந்த உதடுகளில் புன்சிரிப்பு நெளிந்து ஓடியது. அந்திவானம் அவள் கதுப்புக் கன்னங்களில் படர்ந்தது.

பிரிவு வந்தது. களிப்பை விரட்டி, கவலை பாடத் தொடங்கியது. தயங்கித் தயங்கி மேகலை உள்ளே சென்றாள். நெஞ்சு விம்மிவிம்மி யடங்க, மாணிக்கமும் திரும்பித் திரும்பிப் பார்த்துக்கொண்டே வீட்டிற்குச் செல்லும் பாதையில் சைக்கிளை ஓட்டினான்.

4

நாட்கள் நகர்ந்துகொண்டிருந்தன. ஞாயிறும், திங்களும் மாறி மாறி வான வீதியில் விளையாடிக்கொண்டிருந்தன. நாடகத்தில் முதல் அங்கம் இன்னும் முடிவு பெறவில்லை. விழியும், நெஞ்சும் பிரியாமற் புணர்ந்தன. சந்திப்பு, சிரிப்பு, பிரிவு, வேதனை!

"மாணிக்கம், உன் காதல் கதை எந்த அத்தியாயத்தில் இருக்கிறது?" என்று கேட்டான் சேகர்.

"ஆரம்ப இடத்திலிருந்து இன்னும் அடியெடுத்து வைக்கவில்லை. விழிகள்தான் பேசுகின்றன."

"அப்படியானல் இன்னும் பேச்சுப்பகுதி பிறக்கவில்லையா?"

"இல்லை. அவளுடன் உரையாட எனக்கும் ஆசைதான். ஆனல் வெளியாரின் பார்வையில் பட்டுவிட்டால் சேதி பரவிவிடுமே என்று எண்ணி எண்ணி ஆசையை அடக்கி ஒடுக்கி வைக்கிறேன்."

"இப்பொழுது மட்டும் நாடகம் நடப்பதைத் தெரிந்துகொள்ளாமலா இருப்பார்கள்! உள்ளத்தைச் சஞ்சலச் சுனையாக்கிக் கொண்டு உபத்திரவப்படாதே!"

"எந்த வழியிருக்கிறது, பேச்சை நீட்ட?"

"இதுவா தெரியவில்லை! 'தண்ணீர் வேண்டும்' என்று கேட்டுக்கொண்டே நெருங்கு. இதய தாசம்என்ன என்பதையும் தெளிவாக்கு, செய்கையினல்."

"யாராவது பார்த்து விட்டால்...காட்டுத் தீயாகப் பரவிவிடுமே கதை"

இருவருக்ும் இன்னல் தான் பின்பு!"

"மாணிக்கம்! மனதை நெகிழவிடாதே! கஷ்டப் பட்டால் தான் காரியம் கைகூடும்! காதலுக்காகச் சொல்லடியும்

கல்லடியும் பட்டவர்கள் கதையைக் கேட்கவில்லையா நீ! உள்ள உறுதியுடன்செல்! முயற்சி திருவினையாக்கும்!"

5

சைக்கிள், வீட்டின் எதிரில் நிற்பதைக் கண்டு விரிந்தன மேகலையின் கருவிழிகள். மாணிக்கம் பார்வை பாணத்தைத் தொடுத்துக்கொண்டே மேகலையை நெருங்கினான்.

"என்ன வேண்டும்?" என்று கேள்வி போட்டாள் மேகலை.

"தண்ணீர் வேண்டும் தாகத்தைத் தணிக்க" என்று நடுங்கும் குரலில் பதில் கொடுத்தான் மாணிக்கம்.

அவள் உள்ளே போவதற்காகத் திரும்பினாள்.

"மேகலை" என்று அழைத்தான். அந்தக் குரலில் ஆர்வமும், உணர்ச்சியும் பின்னிக்கொண்டிருந்தன.

அவள் இதழ்கள் பிரிந்தன பேசுவதற்கு. அதற்குள் உள்ளேயிருந்து ஒரு குரல் வந்தது. "மேகலை, யார் அங்கே?"

"உள்ளே யார்?" என்று படபடப்புடன் கேட்டான்.

"என் சின்னம்மா!" என்றாள் மெதுவாக.

"சிற்றன்னையா!" நடுங்கியது அவன் குரல். "நான் வருகிறேன்."

"வேண்டாம்; போகவேண்டாம். அம்மாவுக்கு எல்லா விஷயமும் விளங்கிவிட்டது."

அவன் நெஞ்சம் அசாதாரணமாய் அடித்துக் கொண்டது. இரகசியம் என்று எண்ணி இருட்டடிப்புச் செய்துவரும் 'சேதி' வெளியில் வந்து உலாவத் தொடங்கினால் 'காப்பாற்றி வரும் இதயம்' வேகமாய்த் துடிப்பது சாதாரண சம்பவம்தான்.

உள்ளேயிருந்து கேள்வி போட்டவள் வெளியே வந்தாள். இளமை பிரிந்து, முதுமை தழுவிக் கொண்டிருந்த உருவம். "மேகலை, இவர்தானா?" என்று கேட்டாள்.

மேகலை மௌனமாய் நின்றாள்.

"தம்பி, உள்ளே வா. ஒரு சங்கதி சொல்லவேண்டும்?"

மூவரும் உள்ளே சென்றனர். அவள் பேசினாள். "நான் எல்லாவற்றையும் அறிவேன். நீங்கள் இருவரும் வாழ்க்கைப் பூங்காவில் விளையாட வேண்டுமென்பதே என் விருப்பம். ஆனால்......" பேச்சை நிறுத்திப் பெருமூச்சு விட்டாள்.

"ஆனால்என்ன?" என்று ஆர்வத்துடன் கேட்டான் மாணிக்கம். அவன் விழிகள் மேகலையை வட்டமிட்டுக் கொண்டிருந்தன.

"ஆனால்......ஊருக்கு வேண்டாதவள் நான். என் மகள் மேகலை!"

"ஏன்?"

"அது எங்கள் குற்றமல்ல!"

மக்கள் பெருக்கத்தின் அபாயத்தை தடுக்க
கர்ப்பதடைக்கு
விஞ்சானமுறைப்படி தயாரிக்கப்பட்ட
மிருதுவான அமெரிக்கன் கருவிகள்
ஆண். பெண். கையாள்வது
செட்டு விலை ரூ 3-0-0 தபால்செலவு 0-8-0
MULLER & Co. (31. BEAT) G.T. MADRAS.1.

"என்ன அது! விளங்கக் கூறுங்கள்."

"பல ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம். அது என் சகோதரியின் வாழ்வைஎரித்துச் சாம்பலாக்கி விட்டது. கமலம் நெருப்புடன் கலந்தபின் கூட நெஞ்சைச் சுடும் அந்தச் சொற்கள் நிற்கவில்லை; நிலைத்துவிட்டன."

"என்ன? என்ன!"

"கமலம் சிறு வயதுமுதல் பிடிவாதக்காரி. அவள் பிடிவாதம் அவளுக்கு வேண்டியவை களை வாரி வாரித் தந்தது. படித்தாள்; பட்டம் பெற்றாள். பலன்? சீர்திருத்தம் என்ற பேச்சிலே விழுந்தாள். விசாரம் பிறந்தது. வஞ்சகன் ஒருவனின் பிடியில் சிக்கி, கசக்கப்பட்டு, வாடிய மலரானாள்."

"அதற்காக?"

"சமூகம் என் சகோதரிமீது பாய்ந்து, விழுந்து, கடித்துக் கொன்றுவிட்டது. 'விபசாரி' என்று ஊரார் அழைத்தனர். மேகலை பிறந்த மறு மாதம் மரத்தில் தொங்கி, மரணத்தை முத்தமிட்டாள் என் சகோதரி. மேகலையை எடுத்து வளர்த்த குற்றத்திற்காக எனக்கும் 'பரிசு' கிடைத்தது. நானும் சமூகத்திலிருந்து விலக்கப்பட்டவள். நெஞ்சிலே துணிவிருந்தால்மேகலையின் மீது அன்பு மழையைப் பொழி. நான் தடுக்கவில்லை. வாடிய அவள் வாழ்வுச் செடி துளிர் விட்டுப் பூத்துக் காய்த்துக் குலுங்குவதைக் காண

Telegram: 'PUNT COMPANY' Telephone: 55085

பண்ட் & கம்பெனி

(Estd. 1890)

உறுதியான தோலினால் அழகான சூட்கேஸ், மணிபர்ஸ், ஸ்லிப்பர்ஸ், சான்டல்ஸ், பெல்ட் முதலியன நாங்கள் செய்கிறோம். உங்கள் தேவைக்கு எழுதுங்கள்.

PUNT & COMPANY

Chrome Leather Works

170, Broadway, G. T. MADRAS

வேண்டுமென்பதே என் இலட்சியம்." உணர்ச்சி மழை நின்றது.

"நான் கவலைப்படவில்லை. சமூகத்தின் தளையிலிருந்து விடுபட விரும்புகிறேன். மேகலை என் கண் போன்றவள். அவள் வாழ்வை வசந்தமாக்குவதே என் கடமை."

"தம்பி, உன் பெயர் என்ன?"

"மாணிக்கம்."

"மாணிக்கம், உன் வாழ்க்கையில் என்றும் அமைதி நிரம்பிய ஆனந்தம் நர்த்தனமாடும். மேகலை, உன்னைக் காக்க இமை கிடைத்துவிட்டது."

பின்னென்ன? 'வழிவேண்டும்' என்று கேட்டவனுக்கு நீண்ட சாலையைக் காண்பித்தால்...... நடந்தான், நடந்தான், நடந்

தான். வழியில் துணை கிடைத்தது; ஆசியும் அருளப்பட்டது. அவனும் அவளும் கை கோர்த்துக்கொண்டு காதல் கீதம்—பாடிக்கொண்டே நடந்தனர். கோவிலின் நீண்ட பிரகாரம், மரங்களடர்ந்த குளக்கரை, ஆற்றின் வெண் மணல் ஆகியவைகள் அவர்கள் காதலை வளர்பிறையாக்கின.

6

நீல வானைப் போர்த்திக்கொண்டிருந்த கரிய மேகத் திரைகளைக் கிழித்துக்கொண்டு வெண்மதி ஓடிக்கொண்டிருந்தது. திருப்புவனத்தின் கீழ்க் கோடியிலிருந்த மாந்தோப்பில் இரண்டு உருவங்கள் உலாவிக்கொண்டிருந்தன.

"ஏண்டா! சீனி, உனக்குச் சங்கதி தெரியுமா?"

"என்னடா வாசு?"

"பெரிய ரகசியம்! அதைச் சொல்லத்தான் உன்னைத் தோப்புக்கு இழுத்துக்கொண்டு வந்தேன்."

"சீக்கிரம் சொல்லு!"

"அம்மாசத்திரமும் திருப்புவனமும் சம்பந்தி வீடுகளாகின்றன."

"என்னடா புதிர் போடுகிறாய்?"

"புரியவில்லையா உனக்கு? நிசமாகத்தான் நடக்கப்போகிறது. மாணிக்கமும் மேகலையும் காதல் கன்னியில் சிக்கிய புறாக்கள். நான் பல தடவை இரண்டு பேரும் சேர்ந்து சுற்றுவதைப் பார்த்திருக்கிறேன்."

"இது இன்னும் ஊருக்கு எட்டவில்லையா? மாணிக்கத்தின் அப்பா காதிலே விழவில்லையா?"

"எட்ட வைக்கிறதுதான் நம்ம தொழிலாச்சே. நாளைக்குக் குளத்துக்குப் போகும் பாதையிலே 'நோட்டீஸ்' ஒட்டிவிடுவோம். சுவரிலும் விளம்பரம் பண்ணி விஷயத்தைச் சிரிக்க வைத்து வேடிக்கை பார்க்க வேண்டும்."

"நான் 'ரெடி'. இன்று இரவு நம் கடமையைச் செய்திடலாம்."

பேச்சு நின்றது. உருவங்கள் ஊருக்குப் போகும் பாதையில் நடை போட்டன.

7

மாணிக்கத்தின் வீட்டில் பேச்சுப் புயல் வீசியது; சுடு சொற்கள் என்னும் இடிகள் விழுந்தன; கண்ணீர் மழை கொட்டியது.

"மாணிக்கம்! உண்மைக்குத் திரை கட்டாதே! வதந்தி என் செவியைச் சுட்டுப் பொசுக்குகிறது." என்றார் தந்தை.

"என்னப்பா?"

"உனக்கும் அம்மாசத்திரத்திலிருக்கும் பெண்ணுக்கும் 'உறவு' வளருகின்றதாமே. ஊரெல்லாம் வதந்தி பரவுகின்றது. காகிதத்தில் கண்டபடி கிறுக்கிச் சுவருக்கு 'அலங்காரம்' செய்திருக்கிறார்களப்பா."

மாணிக்கம் மறுமொழி அளிக்கவில்லை.

"மாணிக்கம், மனதில் இருப்பதை மறைக்காமல் அப்பாவிடம் சொல். வேண்டாம் இந்தப்

பாதை. மீறி நடந்தால் வாழ்வு பூராவும் விசாரம்தான். என் செல்வனின் வாழ்க்கை பாலைவனமாக மாறுவதை நான் வரவேற்க முடியுமா? அவளை மறந்துவிடு. உன் நன்மைக்காகத்தான் சொல்கிறேன்." என்றாள் தாய். கலங்கிய கண்கள்; கண்ணீர் புரளும் முகம்; கெஞ்சும் குரல்.

"மாணிக்கம், உலகமறியாத சிறு குழந்தையா நீ! சமூகத்தை விரோதித்துக்கொண்டு வாழ முடியுமா? அதுவும் நம்மைப் போன்ற 'அன்றாடம் காய்ச்சி ஆக்கித் தின்னும்' பரம்பரையால் முடியுமா?"

"அதற்காக, பழமைப் பித்தர்களின் பாதத்தில் விழுந்து தண்டனிடுவதா? மூடக் கொள்கையில் படுத்துப் புரளவேண்டுமா? மண் மூடிப் போகவேண்டிய கண் மூடித் தனமான பாசி பிடித்த கொள்கைகளுக்கு முகமன் கூறி உபசரிப்பதா? அப்பா! மலர்ச் சோலையில் மரணத்தைத் தரும் நல்ல பாம்புகள் உல்லாசமாக உலாவுவதைப் பார்த்தும் கை கட்டிக்கொண்டு நிற்பதா? காதலைப்பற்றிக் கதையில்கூடப் படிக்கவில்லையா? அம்மலரைக் கசக்கி எறியப் பிரியப்படுகின்றீர்களா? அப்படிச் செய்தால் வாழ்வு கருகிவிடாதா?"

"மாணிக்கம், வேதனைப்பட்டுக் கண்ணீர் வடிக்காதே. சமூகம் உன் விஷயத்தில் வளைந்து தராது. 'கட்டுப்பாட்டை உடைப்பவன்' என்று—கூறி, உன்னை வெளியேற்றி வேடிக்கை பார்க்கும். அதே சமயத்தில், பணத்தில் படுத்துப் புரளுபவன் அக்காரியத்தைச் செய்தால் 'சீர்திருத்தம்' என்றுபேசிச் சிரித்துக்கொண்டே வரவேற்கும்."

"அப்பா......"

"கலங்காதே, மாணிக்கம். பழுப்பேறிய இலைகளாக இருக்கும் உன் பெற்றோர்கள் மகிழ்ச்சியுடன் உலகமாகிய மரத்தை விட்டு உதிரவேண்டுமென்று எண்ணினால் உன் காதல் பலியாக வேண்டி வரும். தடுத்து நிறுத்த முடியாது." என்று கூறிவிட்டு வெளியே சென்றார் கண்களைத் துடைத்துக்கொண்டே.

"அப்பா" என்று அலறினான் மைந்தன்.

தாயின் விம்மல்தான் பதில் கொடுத்தது.

8

காலை மலர்ந்தது; ஆனால் களிப்பு மலரவில்லை; கவலையிருள் மறையவில்லை. மாணிக்கம் சைக்கிளை எடுத்துக்கொண்டு புறப்பட்டான். தாயும் தந்தையும் தடுக்கவில்லை.

"ஆ! என்ன இது! நான் வருவதற்கு முன்பே, வாசலில் காத்திருக்கும் மேகலை எங்கே?" என்று நெஞ்சம் பேச, விழிகள் தேடின. வீட்டைப் பார்த்தான். கதவு மூடப்பட்டிருந்தது. நெற்றியில் சுருக்கங்கள் ஓடின. வீட்டின் அருகில் சென்று நின்றான். "மனக் கதவுச்கு மாட்டு இதை" என்று கூறியது பெரிய பூட்டு. உள்ளம் உடைந்தது. கதவைத் தட்டினான்? பைத்தியக்காரன்! — பதில் கிடைக்குமா?

"வீட்டிலே யாருமில்லீங்க. நேற்று ராத்திரி யாரோ ஒருத்தர் வந்து வேகமாகப் பேசினாரு. சின்னம்மா இரவு பூராவும் அழுதுகொண்டே இருந்தாங்க. காலையில்தான் ரயிலுக்குப் போனாங்க. நீங்கவந்து கதவைத் தட்டினா, இந்தக் கடிதாசியைக் கொடுக்கச் சொன்னாங்க, பெரியம்மா" என்று பின்பக்கத்திலிருந்து பேச்சு வந்தது.

திரும்பிப் பார்த்தான். ஏழ்மை என்றால் இதுதான் என்று சொல்லும் ஒரு உருவம் — கிழவி — நின்றுகொண்டிருந்தது. அவள் காகிதத்தை நீட்டினாள். நடுங்கும் கரங்கள்— அதனை வாங்கிப் பிரித்துப் பார்த்தன.

"மாணிக்கம், மேகலையை மறந்துவிடு. உன் தந்தை கூறியது உண்மை. பெற்றவர்களின் நெஞ்சில் நெருப்பை மூட்டுவதா? விஷப் பூச்சிகளின் நடுவில் விளையாட முடியுமா? மேகலைக்கு இந்தப் பிறவியில் சுகம் என்பது கிடையாது. சமூகம் அவளை உயிருடன் கல்லறையில் வைத்துவிட்டது. உங்கள் காதல் பலியாகி விட்டது. எங்களைத் தேடாதே! ஏனெனில் நாங்கள் எங்கே செல்கிறோம் என்பதே எங்களுக்குத் தெரியாது..."

"பலி! என் காதல்பலி யாகிவிட்டது! மேகலை!" என்று உரத்த குரலில் கத்தினான் மாணிக்கம். நிலைகலங்கி வெட்டுண்ட பச்சைமரம் மாதிரி விழுந்தான்.

"மாணிக்கம்! மகனே!" என்று அலறிக்கொண்டே ஓடி வந்தாள் அவனைப் பெற்றவள். தந்தையும் வந்தார்.

நிலத்தில் கிடந்த மகனின் தலையை மடியில் வைத்துக்கொண்டாள். தலையிலிருந்து கொட்டும் இரத்தம் அவள் சேலையில் சிவப்பு வர்ணம் தீட்டியது.

கூட்டம்கூடியது. விதவிதமான பேச்சுக்கள் விளையாடின. விபரீதமான விளக்கங்கள் பரிமாறப்பட்டன.

"உயிர் போச்சா?" என்று கேட்டார் ஒருவர்.

"உயிர் போகல்லே; விழுந்த வேகத்தில் தலையிலே அடிபட்டதினால் மூர்ச்சையாயிட்டாரு"

என்று கூறினுள் அருகிலிருந்த ஒருத்தி.

மாட்டு வண்டியில் மாணிக்கத்தை வைத்தனர். தாயும் தந்தையும் ஏறினர். வண்டி ஊரை நோக்கிப் புறப்பட்டது. அவன் ஏறிவந்த சைக்கிள் கவனிப்பாரின்றி அப்படியே நின்றுகொண்டிருந்தது, ஒரு புளிய மரத்தின் நிழலில்.

●

"கதை முடிந்துவிட்டது" என்றேன் நான்.

"எப்படி இருக்கிறது?" என்று கேட்டான் மகாலிங்கம்.

"முடிவுதான் உயிரோட்டம். காதல் சாதலின் மறுதோற்றம் தான். ஆனுல் உணர்ச்சியைப் பலிபீடத்தில் அர்ப்பணித்த மாணிக்கமும் மேகலேயும் சாவின் மடியில் விளேயாடவில்லே; மண்ணுலகில் வாழ்கின்றனர் நடைப்பிணங்களாக. அவர்களேப் பார்க்கும் போதெல்லாம் சமூகம் செய்த சதியின் நினைவு வரும். அதனைப் போக்கவேண்டும்; புதியதோர் சமூகத்தை அமைக்கவேண்டும் என்ற எண்ணமும் பிறக்கும். மாதவிக்கு முதல் பரிசு கிடைத்ததில் எனக்கும் மகிழ்ச்சி" என்றேன் நான்.

மகாலிங்கமும், சண்முகானந்தமும் அங்கிருந்துபுறப்பட்டனர். அறையில் அமைதி நிலவியதும் கவனப் பறவை பக்கங்களுடன் பறக்க ஆரம்பித்தது. நான் புத்தகக் கூண்டில் அடைபட்டேன்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) REGD. BY CENTRAL DRUGS LABORATORY OF GOVT. OF INDIA. UNDER NO. CDL / 688

எக்காரணத்திலுைம் எத்தனே மாதமாைுலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவருமல் உடனே வெளியாகும். அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளே வாங்கி ஏமாருதீர்கள். விலே ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)
Government Registered No. 266

12 நாட்கள் சாப்பிட்டால் 6 வருஷத்திற்கு சாஸ்வதமாகக் கருவைத் தடுக்கும். மாதவிடாய் தவருது. அநேக நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளே வாங்கி ஏமாருதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்ப்ரவரியாக கருவைத் தடுக்கும். பில்ஸ் விலே ரூ. 12-0-0 ஜெல்லி விலே ரூ. 6-8-0 (தபால் செலவு தனி)

Mfgrs: **SEENU & CO., P. B. 1638, (6) Madras-1**

பிராஞ்சு: *134, SERANGOON ROAD* சிங்கப்பூர்
சிலோன் ஏஜண்ட்:
NEW COLOMBO MEDICAL STORES, 82, Main st., கொழும்பு-11

நல்ல நண்பன்

டி. ஜே. இன்பராஜ்

சுவரில் மாட்டப்பட்டிருந்த கடிகாரம் "டாண், டாண்" என்று ஒன்பது முறை அடித்தது. கோபு புத்தகப் பையை எடுத்துக் கொண்டு பள்ளிக்கூடத்திற்கு ஓடினான்.

கோபு படிப்பில் கெட்டிக்காரன். வகுப்பில் அவன்தான் முதல் பையன். பரீட்சைகளில் நிறைய மார்க்குகள் வாங்கியிருந்தான். அவன் வாங்கிய பரிசுகள் எல்லாம் கண்ணாடிப் பீரோவில் வரிசையாக அடுக்கப்பட்டிருந்தன.

கந்தன் கோபுவின் நண்பன். நல்ல குணமுள்ளவன். ஏழைப் பையன். படிப்பில் கெட்டிக்காரனாக இருந்தாலும் கோபுவைப் போல் அவ்வளவு புத்திசாலியல்ல. அவன் வகுப்பில் இரண்டாவது பையன்.

கோபுவின் அப்பா ஒரு சப் இன்ஸ்பெக்டர். அவர் கோபுவிற்கு ஒரு சைக்கிள் வாங்கிக் கொடுத்திருந்தார். அதில் ஏறிக்கொண்டு தான் அவன் பள்ளிக்கூடத்திற்குப் போவான்.

கோபு சைக்கிளில் "விர்" ரென்று பறந்தான். சைக்கிள் ஒரு சிறிய சந்து வழியாகச் சென்றது. ஒரு குடிசைக்கு முன்னால் அவன் சைக்கிளை நிறுத்தினான்.

குடிசையின் கதவு உட்புறம் தாளிடப்பட்டிருந்தது. கதவைத் தட்டக் கையை ஓங்கினான். உள்ளே பேச்சுக் குரல் கேட்டது. கோபு உற்றுக் கவனித்தான்.

"கந்தா, இனிமேல் என்னால் உன் பள்ளிக்கூடச் சம்பளத்தைக் கட்டமுடியாது. என் சம்பாத்தியம் கூழுக்கே போதவில்லை. இன்று பள்ளிக் கூடத்தில் பரீட்சைவைப்பதா

யும் அதில் நன்ருய் எழுதினுல் இலவசமாகப் படிக்கவைக்கப் போவதாகவும் சொன்னுயல்லவா? பரீட்சையை நன்ருக எழுது.”

“அம்மா, நான் எவ்வளவு நன்ருய் எழுதினுலும் கோபுவை விட அதிக மார்க்கு வாங்க முடியாது. அவன் என்னைவிடப் படிப்பில் கெட்டிக்காரன்.”

“பின்னே, நான் என்ன செய்வது? செட்டியார் கடையில் சொல்லியிருக்கிறேன். உன்னை வேலைக்கு வைத்துக்கொள்வதாகச் சொன்னுர். இந்த மாத முடிவுடன் பள்ளிக்கூடத்திலிருந்து நின்றுவிடு.”

“சரி, அம்மா.”

அதற்குமேல் கோபுவால் சும்மா இருக்க முடியவில்லை. ‘படபட’ வென்று குடிசையின் கதவைத் தட்டினுன். உடனே கந்தன் வந்து கதவைத் திறந்தான். பிறகு “கோபு, இதோ வந்துவிட்டேன்” என்று சொல்லிவிட்டுக் குடிசைக்குள் ஓடினுன். புத்தகப் பையை எடுத்துக்கொண்டு திரும்பி வந்தான்.

கோபு கந்தனின் முகத்தைக் கவனித்தான். அவன் முகம் வாடியிருந்தது. கந்தன் சம்பளம் கட்டமுடியாமல் பள்ளிக்கூடத்திலிருந்து நின்றுவிட்டால் அவனைப் போன்ற நல்ல நண்பன் எங்கே கிடைப்பான்? கோபுவுக்கு மிகவும் வருத்தமாக இருந்தது.

கந்தன் சைக்கிளின் பின்னுல் உட்கார்ந்து கொண்டான். கோபு சைக்கிளைப் பள்ளிக்கூடத்திற்கு ஓட்டினுன்.

பள்ளிக்கூடத்தில் ஒரே ஆரவாரம். பையன்கள் எல்லோரும் கோபுவைக் கண்டவுடன், “கோபு, உனக்குத்தான் பரீட்சையில்

முதல் மார்க்குக் கிடைக்கும்" என்று சொன்னார்கள். அதைக் கேட்டவுடன் கந்தனின் கண்கள் கலங்கின.

மணி அடித்தது. ஆசிரியர் எல்லோருக்கும் கேள்வித் தாள்களைக் கொடுத்தார். கோபு கேள்வித் தாளைப் பார்த்தான். மிகவும் சுலபமான கேள்விகள். சிறிதுநேரம் யோசித்தான். ஏதோ ஒரு முடிவுக்கு வந்தான். 'மள மள'வென்று விடைகளை எழுத ஆரம்பித்தான்.

அன்று மாலை பரீட்சையின் முடிவை அறிய மாணவர்கள் ஆவலுடன் கூடியிருந்தனர். கந்தன் அதிகமான மார்க்குகள் வாங்கியிருப்பதாகவும், அவனுக்குத்தான் இலவசமாகப் படிக்கும் வசதி கிடைக்குமென்றும் ஆசிரியர் கூறியபோது அனைவரும் ஆச்சரியப்பட்டனர். கோபு பத்தாவது பையனாக இருந்தான்!

கந்தனின் களிப்பைக் கண்டு கோபு ஆனந்தம் அடைந்தான். தன் நண்பனுக்குப் படிக்கும் வசதி கிடைப்பதற்காக, தனக்குத் தெரிந்த விடைகளை வேண்டுமென்றே அவன் தப்பாக எழுதியது பள்ளி ஆசிரியருக்கும், மாணவர்களுக்கும் எங்கே தெரியப் போகிறது!

தம்பி தங்கைகளுக்கு
நல்ல கதைப் புத்தகங்கள்

இருகதைகள்	நாரா நாச்சியப்பன்	...	0	4	0
சவுக்கடி தர்பார்	,,	...	0	6	0
குமரித் தீவு	,,	...	0	2	0
மணி அடித்தது	நவீனன்	...	0	4	0
சினிமாவில் ரங்கன்	கலைமணி	...	0	2	0
சந்தனத்தேவன்	தங்கமணி	...	0	2	0
சாரநாத்	அருவி	...	0	2	0
சாம்பு	வளர்மதி	...	0	2	0

பொன்னி லிமிடெட், — சென்னை-21

வளரும் இலக்கியம்

நாவல்

இளமைப்பித்தனின் முதல் நாவல்தான் சுமங்கலி என்றாலும் எடுத்துக்கொண்ட கருத்தும் கொள்கையும் அவருக்கு முழு வெற்றியைத் தந்திருக்கின்றன.

ஜம்புலிங்கத்தின் அத்தை மகள்தான் சாரதா! எனவே, சட்டப் புத்தகங்களையும், சமையற்காரனையும் கட்டிக்கொண்டு கிடந்த ஜம்பு, சாரதாவைத் தன் வாழ்க்கைத் தேரின் சாரதியாக்கிக் கொண்டதில் வியப்பில்லை. கோடை வெப்பம் போலிருந்த அவன் வாழ்க்கையில் சாரதா குளிர்தென்றலாக வீசினாள். எனினும், ஏனோ தன் அத்தானை நெருங்கி ஸ்பரிசிக்க அவள் அஞ்சுகிறாள்! அந்த நேரங்களில் ஒரு குற்றவாளியைப் போல் குமுறுகின்றாள்! செய்யாத அந்தக் குற்றத்தைப் பெரிதாக எண்ணி எண்ணித் தனது தூய காதலைக் கருப்புத் திரையால் மூடிக்கொண்டு விடுகிறாள் சாரதா. சாரதாவின் தாயோ, துரத்தி வரும் போலீஸுக்கு அஞ்சி, இருட்டுக்குள் விரைந்து செல்லும் திருடனைப் போலத் தன் மகளை அழைத்துக்கொண்டு ஜம்புவின் வீட்டை விட்டே வெளியேறுகிறாள்.

சாரதா செய்த குற்றம் என்ன? அக்குற்றத்திற்குத் தாய் எப்படி உடந்தையானாள்? கொலை செய்தார்களா? கொள்ளையடித்தார்களா? துரோகமா? சூழ்ச்சியா?... எது என்றே நமக்குப் புரியாதபடி கதையின் கடைசிப் பக்கம் வரைக்கும் நம்மை இழுத்துச் சென்றுவிடுகிறார் ஆசிரியர் இளமைப்பித்தன். கடைசியில் சாராதாவுக்கும் ஜம்புவுக்கும் இடையே கிடக்கும் சந்தேகப் புதிர்த் திரை விலக்கப்படுகிறது. "நான் பெரிய தவறு செய்தவள்; அதாவது சின்ன வயதில் விதவையானவள்; உங்களுக்கு ஏற்றவளல்ல!" என்று சாரதா கூறும் போது, "பூ! இதற்குத்தானா தாயும் மகளும் சதிகாரர்களைப் போல் அஞ்சி ஓடி ஒளிந்து கொண்டார்கள்?" என்று நம்மால் ஆச்சரியப்படாமல் இருக்க முடியாது. ஏனெனில், இன்றைய எழுச்சி பெற்ற சமுதாயத்திலே தேன் வற்றாத ஒரு இளம் விதவை மனங்கொண்ட வாலிபனை மணக்கக் கருதுவது குற்றமாகாது. ஆனால் அதை விடுத்து 'வைதவ்யம்' என்று சொல்லிக்கொண்டு வாழ்வைத் தற்கொலை செய்து கொள்வதுதான் குற்றமாகும்! இந்த எண்ணத்தை மனதில் கொண்டுதான் கதாநாயகன் ஜம்புகூடச் 'சாரதா, நீ சுமங்கலி' என்று சட்டென்று கூறிவிடுகிறான் எனலாம். அள

வுக்கு மீறிய பாசமும் காதலும் ஒருபுறமிருந்தாலும், நாட்டிலே மூடத்தனத்தை முறியடித்துக் கொண்டு சீர்திருத்தக் கருத்துக்களைப் பரப்பிவரும் ஒரு 'வலிவுள்ள சக்தி'தான் சட்டென்று அப்படிச் சொல்லத் தைரியம் கொடுத்திருக்க வேண்டும்.

இளமைப்பித்தனின் கதையைப்பற்றி நாம் அதிகம் சொல்ல வேண்டுமா? தமிழ் மக்களின் இதயங்களிலே இளமைப்பித்தனுக்குத் தனி இடம் உண்டு. தெளிந்த நீரிலே அன்னப்படகு அசைந்து செல்வதைப் போன்ற அழகான நடையோட்டம்! முன்னுரையிலிருந்து முடிவுரை வரைக்கும் ஒரே மூச்சாகப் படித்து முடிக்கத் தூண்டும் சிறு நாவல் 'சுமங்கலி.'

[சுமங்கலி: ஆசிரியர்: இளமைப்பித்தன். வெளியிட்டோர்: பழனி பிரசுரம், மணிக்கூண்டு புதுக்கோட்டை. விலை 1-0-0.]

தேவகி—சுவைக்கப்பட்ட தேன் குடம்! அவளின் அன்புத் தீ, தங்கையைப் போலத் தன்னை ஆதரித்து வரும் ஒரு பெரியவரைக் கணவன் என்று கூறச் செய்கிறது. ஆனால் அவளையுமறியாமல் அவள் உள்ளத்திலே சீறியெழுந்த காதல்தீ அவளையே எரித்துச் சாம்பலாக்கி விடுகிறது.

இந்த நூலைப் படித்து முடித்ததும் நமது கண்களுக்கு முன்னால் வந்து நிற்கும் பரிதாபச் சித்திரம் 'தேவகி'தான்! இந்த நாட்டில் இன்னும் பெண்களுக்குச் சரியானபடி சுதந்திரம் வழங்கப்படவில்லை. வழங்கப்பட்டிருக்கும் உரிமைகளுக்கும் நியாயமான மரியாதையை ஆண் உலகு அளிக்கவில்லை. இது நீடித்திருக்கும் வரையில், எந்தச் சுதந்திரக் குளத்தில் நீந்த விட்டாலும், பசியோடிருக்கும் ஆண் முதலைகளுக்குப் பெண்மை பலியாவது திண்ணம்! இது பெண்ணின் குற்றமல்ல!

வாழ்க்கையில் சறுக்கி விழுந்த பெண்களெல்லாம் மீண்டும் தன்னிலை பெறவேண்டும் என்ற புரட்சிக் கருத்துக்குக் கைலாகு கொடுக்கும் இன்றைய உலகின் எண்ணத்திற்கு எதிராக, கெடுக்கப்பட்ட பெண்கூட மீண்டும் வாழமுடியாது—வாழக்கூடாது என்ற தத்துவத்தைத்தான் கதை முடிவு எடுத்துக் காட்டுகிறது. அது வேறுவிதமாக அமைந்திருப்பின் சிறந்திருக்கும்.

வைகறை வெளியீட்டார் இந்த நாவலை அழகாக வெளியிட்டிருக்கிறார்கள். அட்டைப் படத்தை இன்னும் கொஞ்சம் கவர்ச்சிகரமானதாகச் செய்திருக்கலாம்.

[அன்புத் தீ: எழுதியவர் ஜெக சிற்பியன். வைகறை வெளியீடு, 62, சுப்புராய செட்டி வீதி, திருப்பாதிரிப்புலியூர். விலை 0—12—0.]

தில்லைவில்லாளன் தீட்டியிருக்கும் சிறுநாவல் **அந்தப்புரம்.** அந்தப்புரம் என்ற பெயரைச் சொன்ன அளவிலேயே ஒரு நண்பர் எரிமலையாகி விடுகிறான். தென்றலாயிருந்தகாதலி புயலாகி

விடுகிருள். காதல் சிக்கல்—சந்தேகச் சூருவளி—மர்மக்குகை—கொலை இவையெல்லாம் கதையில் இடையிட்டு 'அடுத்து என்ன வருகிறது' என்று நம்மைத் தூண்டிச் செல்கின்றன. கதையில் தனிவேகம் இருக்கிறது. எனவே, விடாமல் படிக்கத் தூண்டுகிறது.

வில்லாளனின் அத்திப்பூக்களை விரும்பிப் படித்தவர்கள் 'அந்தப்புரம்' ஒரு சாதாரணப் பொழுது போக்குக்கதையாகவே அமைந்து விட்டிருப்பதையே காண்பார்கள்.

[அந்தப்புரம்: தில்லைவில்லாளன் தீட்டியது. வெளியிட்டோர்: திராவிடன் பதிப்பகம், த. பெ. நெ. 18, வேலூர். விலை 0—12—0.]

வரப்பெற்றோம்

போன்னி பெற்ருள்

[அ. அ. நூர் எழுதியது. வெளியிட்டோர்: தமிழ்க் களஞ்சியம், நாமக்கல். விலை 0–8–0.]

சமுதாய பலிபீடம்

[குணாளன் வரைந்தது. வெளியிட்டோர்: இராசன் பண்ணை, குடியேற்றம். விலை 0—3—0.]

கவிதை

கவிஞர் வி. துரைசாமி அவர்கள் எழுதிய முதற்காதல் முதலிய இருபத்தேழு கவிதைகளைப் புத்தகமாகத் தொகுத்திருக்கின்ருர்கள் பழனி பிரசுராலயத்தார். 'ஒரு வார்த்தை', 'ஏழையின் குரல்' முதலிய கவிதைகள் சமுதாயத்துக்குத் தேவையான கருத்துக்களை ஒலிபரப்புகின்றன. 'அந்தோ அனுராதா'—குழந்தையை இழந்த தந்தையின் சோக கீதம்! அது நம் உள்ளத்தைத் தொடுகின்றது.

[முதற்காதல்: எழுதியவர் கவிஞர் வி. துரைசாமி. வெளியிட்டோர்: பழனி பிரசுரம், மணிக்கூண்டு, புதுக்கோட்டை. விலை 1—0—0.]

"இதயக் குமுறல்" முதலிய கவிதைகளைக் கவிஞர் சாரண பாஸ்கரன் பாடியுள்ளார். ஒவ்வொரு கவிதையும் நன்ருகச் சுவைத்துப் படிக்கத் தகுந்தது. மகிழ்ச்சி மடல் எல்லாக் கவிதைகளுக்கும் சிகரம் வைத்தாற்போல் விளங்குகிறது. நல்ல முயற்சி. கவிதைகளைப் பகுதி பகுதியாகப் பிரித்து வெளியிட்டிருந்தால் இன்னும் நன்ருக அமைந்திருக்கும்.

[இதயக் குமுறல்: கவிஞர் சாரண பாஸ்கரன் பாடியது. வெளியிட்டோர்: தென்றல் மன்றம், கூத்தாநல்லூர். விலை 1—8—0.]

பாரதியின் லட்சியங்களையும், பாரதிதாசனின் கருத்துக்களையும் சுவைமிக்க பாடல்களால் எடுத்துச் சொல்கிருர் கவிஞர் சாமி-பழனியப்பன். பாரதி—பாரதிதாசனைப் பற்றிய சிறு விம

ரிசனம் என்று இந்நூலைச் சொல்லலாம்!

[பாரதியும் பாரதிதாசனும்: எழுதியவர்: கவிஞர் சாமி-பழனியப்பன். வெளியிட்டோர்: மாணவர் நூற்பதிப்புக் கழகம், கல்லுக்கட்டி — காரைக்குடி. விலை 0—2—0.]

சிறுவர் கதை

ஜில்ஜில் பதிப்பக வெளியீடுகள் என்றாலே சிறுவர்களுக்கு நன்னாரி சர்பத் கிடைப்பது மாதிரிதான்! அதுவும் 'ராஜன்' எழுதும் கதைகளைப் படிப்பது என்றால் ஐஸ்போட்ட சர்பத் சாப்பிடுவது போலத்தான். எனவே வாஸந்தி சிறுவர்களிடம் நல்ல வரவேற்பைப் பெறும் என்பதில் சந்தேகமே இல்லை. 'ஒரு ஊரில் ஒரு ராஜா...' என்று பாட்டி கதை சொல்லிக் கொண்டு போவது போன்ற நடை சிறுவர்களை நிச்சயம் கவர்ந்துவிடும்! ஆனால் ஒன்று; பயன்தரத்தக்க விஷயங்களைத் தன் கவர்ச்சி மிகுந்த நடையிலே கதையாகச் சிறுவர்களுக்குத் தந்தால் பெற்றோர்கள் 'ராஜனு'க்குக் கடமைப் பட்டவர்களாவார்கள்!

[வாஸந்தி: ராஜன் எழுதியது. வெளியிட்டோர்: ஜில்ஜில் பதிப்பகம். த. பெ. எ. 1793. சென்னை-1. விலை 0—8—0.]

பத்திரிகைகள்

பத்திரிகை உலகிலே நடமாடும் சில ஆபாசக் கோட்டான்களை எதிர்த்துப் புதுக்குரல் 'பெருங்குரல்' எழுப்பியுள்ளது. பத்திரிகையின் லட்சியம் பாராட்டத் தகுந்தது.

[புதுக்குரல்: ஆசிரியர்: ஏ. வி. கன்னியப்பன். வாரம் ஒரு முறை. தனி இதழ் 0—2—0. "புதுக்குரல்" சென்னை- 4.]

முற்போக்குக் கொள்கைகளை அடிப்படையாகக் கொண்டு வரும் வாரப் பத்திரிகை சங்கு நாதம். உலகம், சமுதாயம், கல்வி, கலை, கற்பனை ஆகிய பகுதிகளாகச் சங்குநாதம் ஒலிக்கின்றது.

[சங்குநாதம்: ஆசிரியர்: ச. பழனிவேலு. வாரம் ஒருமுறை. தனிஇதழ் 0-2-0. 'சங்குநாதம்' சிவகங்கை.]

கதை, கவிதை, சினிமாச்செய்திகள் முதலியவற்றைக் கொண்டு மாதம் ஒருமுறை வெளிவரும் சுவை நிறைந்த கருத்திதழ் நாட்டாண்மை.

[நாட்டாண்மை: ஆசிரியர்: வெ. நாராயணன். விலை 0-2-0. 80, ஜெனரல் பாட்டர்ஸ் ரோடு, சென்னை-2]

—அரசன்.

Edited, Printed and Published by MURUGU SUBRAMANIAN for PONNI LTD. at PONNI ACHAKAM, 18, Sani Amman Koil Street, Tondiarpet, Madras—21